# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2032 மார்கழி 14 சனிக்கிழமை (29-12-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:34


## ராணுவ அதிகாரி நீல் டயஸ் திங்கள் ஓய்வுபெறுகின்றார்?

கொழும்பு,டிசெ.29

இராணுவத்தின் பிரதம அதிகாரியான (Chief of staff) மேஜர் ஜெனரல் நீல் டயஸ் நாளைமறுதினம் திங்கட்கிழமை தமது பதவியிலிருந்து ஓய்வுபெறுகின்றார். நேற்று அவரது கடைசிச்சேவை நாளாகும்.

நாளை மறுதினத்துக்கு முன்னர் சேவை நீடிப்புக்கான அறிவித்தல் எதுவும் கிடைக்காவிட்டால் அவரது பதவியிலிருந்து ஓய்வுபெற வேண்டியிருக்கும்.

தற்போது லண்டன் சென்றிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அதற்கு முன்னர் நாடு திரும்பி, சேவை நீடிப்புக் கடிதம் ஒன்றை அவருக்கு வழங்குவதற்கு வாய்ப்புக் குறைவு என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஜூன் இறுதியிலும் இவ்வாறு அவர் ஓய்வு பெறுவதற்கான ஆயத்தங்களைச் செய்து, தியத்தலாவையில் பிரியாவிடையை ஒட்டிய அணி வகுப்பு மரியாதையை ஏற்கத் தயாராகிக் கொண்டிருந்த சமயம்,

(12 ஆம் பக்கம் பார்க்க)

### குருடர் போன்று பேச்சுக்குச் செல்லவில்லை

## புலிகளுடன் காணப்படும் இணக்கம் சர்வஜன வாக்கெடுப்புக்கு விடப்படும்

### ஐ.தே.க. பொதுச் செயலாளர் கூறுகிறார்

கொழும்பு,டிசெ.29

"இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து விடுதலைப் புலிகளுடன் பேசி ஏற்படுத்தப்படும் இணக்கம் சர்வஜன வாக்கெடுப்புக்கு விடப்படும். நாட்டு மக்களின் அங்கீகாரம் இன்றி அந்த இணக்கம் நடைமுறைப்படுத்தப்பட மாட்டாது. குருடன் போன்று நாம் புலிகளுடன் பேச்சுக்குச் செல்லவில்லை."

ஐ.தே.கட்சியின் பொதுச் செயலாளர் செனரத் கப்புகொட்டுவ அறிக்கையொன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

புலிகளுடனான பேச்சுக் குறித்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஏற்பாட்டாளராகச் செயற்பட நோர்வே அரசு இணக்கம்!

## புலிகளின் பதில் எதிர்பார்ப்பு

கொழும்பு,டிசெம்பர்29

**இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மீண்டும் சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்கான ஏற்பாட்டாளராகப் (Facilitator) பணியாற்றும்படி இலங்கையின் புதிய அரசு விடுத்த அழைப்பை நோர்வே ஏற்றுக்கொண்டுள்ளது.**

**இந்த விடயம் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பிடமிருந்தும் ஆக்கபூர்வமான பதிலைத் தாங்கள் எதிர்பார்த்துக் காத்திருப்பதாக நோர்வேத் தரப்பு தெரிவித்திருக்கின்றது.**

இரு தரப்பினரையும் பேச்சுக்கு இணங்கவைப்பதற்கான ஏற்பாட்டாளராகச் செயற்படுமாறு இலங்கை அரசு விடுத்த அழைப்பு தமக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாகவும் -

மீண்டும் அந்தப் பணியைத் தொடர்வதற்கு தமது அரசு பூரண விருப்பம் கொண்டுள்ளதாகவும் -

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோண் பீற்றர்ஸன் தெரிவித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மாமனிதர் கலைஞானி நேற்றுக் காலமானார்!

யாழ்ப்பாணம்,டிசெ.29



யாழ். குடாநாட்டின் அரும்பொருள் சேகரிப்பாளர்களில் மூத்தவரான மாமனிதர் கலைஞானி ஆ.செல்வரத்தினம் நேற்று தனது 69 ஆவது வயதில் காலமானார்.

நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டு, கடும் சுகவீன முற்ற நிலையில் கடந்த 8 ஆம் திகதிமுதல் யாழ்.ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவந்த அவர், சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்றுக்காலை அங்கு காலமானார்.

கடந்த 55 வருடங்களாகத் தமிழர் வரலாற்றுப் பொக்கிஷங்களை தனிஒருவராக நின்று சேகரித்து ஆவணப் படுத்திய கலைஞானி ஆ.செல்வரத்தினம், 1991 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட முத்தமிழ்விழாவின்போது விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனால் 'மாமனிதர்' விருது வழங்கிக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. மாவட்ட தேர்தலை எதிர்த்து அலிசாகிர் வழக்கு

கொழும்பு,டிசெ.29

மட்டக்களப்பு மாவட்டத்தில் மீள் தேர்தல் நடத்த நீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என்று கோரி மட்டக்களப்பு மாவட்டத்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஐ.தே.க. வேட்பாளருமான அலிசாகிர் மௌலானா கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு ஒன்றை நேற்று தாக்கல் செய்துள்ளார்.

பொதுத் தேர்தல் தினமன்று விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள 69 ஆயிரத்து 499 வாக்காளர்கள் வாக்களிக்க வரமுடியாதவாறு பதினொரு சோதனைச் சாவடிகளும் மூடப்பட்டன. இதன் காரணமாக வெற்றிபெறும் வாய்ப்பை இழந்துள்ளேன் - என்று அவர் தமது மனுவில் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே நடந்த வாக்களிப்பின் முடிவுகளை செல்லுபடியற்றதாக்க வேண்டும். மீண்டும் தேர்தல் நடத்த வேண்டும் என்று அவர் தமது மனுவில் கோரியுள்ளார்.

இராணுவத் தளபதி லெப்டினனட் லயனல பலகல்ல உட்பட 9 இராணுவ அதிகாரிகளும் பொலீஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கு உட்பட 8 பொலீஸ் அதிகாரிகளும் இந்தப் பிரதிவாதிகளில் அடங்குகின்றனர்.(க-3)

### வடக்கில் இடம்பெயர்ந்த

## மக்களை மீளக் குடியமர்த்த போதிய நிதி வசதி இல்லை!

### புனர்வாழ்வு அமைச்சர் ஜயலத் தகவல்

கொழும்பு,டிசெ.29

வடக்கில் இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்த எனது அமைச்சில் போதிய நிதி இல்லை. இதனால் அவர்களை உடனடியாக மீளக் குடியமர்த்த முடியாது.

புனர்வாழ்வு, அகதிகள் மீள் குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனா இப்படிக் கூறியுள்ளார்.

நேற்று தம்மைச் சந்தித்த அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தூதுக் குழுவிடமே அவர் இப்படித் தெரிவித்துள்ளார்.

அகதிகளை மீளக் குடியமர்த்தல், பயணப் பாதுகாப்பு அனுமதி முறை நீக்கல், பாடசாலைகளில் உள்ள படைமுகாம்களை வாபஸ் பெறுதல் உட்பட ஆறு கோரிக்கைகளைக் காங்கிரஸ் குழு முன்வைத்தது.

காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜி.ஜி.கஜேந்திரகுமார், அ.விநாயகமூர்த்தி மற்றும் கட்சியின் செயலாளர் என். குமர

(12 ஆம் பக்கம் பார்க்க)

### அரசின் நல்லெண்ணத் தகவலையடுத்து

## கிழக்கில் புலிப் போராளிகள் நேற்று தமது நடமாட்டத்தைத் தவிர்த்தனர்!

மட்டக்களப்பு,டிசெ.29

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் கடந்த மூன்று தினங்களாக நடமாடிய விடுதலைப் புலிப் போராளிகள் நேற்று அதனைத் தவிர்த்துக்கொண்டனர்.

அரச தரப்பில் விடுக்கப்பட்ட நல்லெண்ணத் தகவலின் பிரகாரம் தற்போது புலிகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேச நடமாட்டத்தைத் தவிர்த்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

இதேவேளை -

அரசு யுத்தநிறுத்தம் ஒன்றைப் பிரகடனப்படுத்தும்வரை இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேச நடமாட்டத்தைத் தவிர்த்துக்கொள்ளுமாறு பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன விடுதலைப் புலிகளைக் கேட்டுள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பட்டிருப்புப்பாலச் சோதனை அதிரடிப்படையின் பொறுப்பில்!

மட்டக்களப்பு,டிசெ.29

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதியையும் கட்டுப்பாட்டுப் பகுதியையும் இணைக்கும் பட்டிருப்புப்பாலச் சோதனை நிலையத்தின் பொறுப்பை விசேட அதிரடிப்படையினர் நேற்று மாலை ஏற்றுக்கொண்டனர்.

களுவாஞ்சிக்குடிப் பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலீஸாரின் பொறுப்பில் இந்தச் சோதனை நிலையம் இதுவரைகாலமும் இருந்துவந்தது.

களுவாஞ்சிக்குடி அதிரடிப்படை முகாமில் இருந்து வாகனங்களில் வந்த அதிரடிப்படையினர் நேற்று மாலை அந்தச சோதனை நிலையங்களின் பொறுப்பை ஏற்றுக்கொண்டனர்.

யுத்தநிறுத்தம் நடைமுறைக்கு வந்ததை அடுத்து கட்டுப்பாடற்ற பகுதியில் இருந்து விடுதலைப் புலிப் போராளிகள் பட்டிருப்புப்பாலம் ஊடாக நகருக்கு வந்து திரும்பியிருந்தனர்.

இதன் எதிரொலியாகவே அந்தச் சோதனை நிலையப் பொறுப்பு அதிரடிப்படையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (க-3)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# நாசகாரச் செயல்களில் ஈடுபட்டுவரும் குழுக்களின் ஆயுதங்கள் உடனடியாகக் களையப்பட வேண்டும்

## பிரதமர் ரணிலுக்கு யாழ்.பல்கலை மாணவர் கடிதம்

யாழ்ப்பாணம்,டிசெ.29

அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் தங்கியுள்ள ஆயுதக் குழுக்கள் தம்மிடம் உள்ள ஆயுதங்களைப் பயன்படுத்தி நாசகாரச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றன. அவற்றை நிறுத்துவதற்கு அவர்களிடம் உள்ள ஆயுதங்களை உடனடியாகக் களைய வேண்டும்.

- இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நேற்று அனுப்பிவைக்கப்பட்ட கடிதம் ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

'பக்ஸ்' மூலம் அனுப்பப்பட்டுள்ள அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்தக் குழுக்களிடமிருந்து உடனடியாக ஆயுதங்களைக் களைய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துவதற்காக இந்தக் குழுக்கள் ஆயுதமுனையில் மேற்கொண்டு வருகின்ற - தமிழ் மக்களுக்கு எதிரான அழிவுகரமான செயற்பாடுகளை - தங்களின் கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகின்றோம்.

அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் ஈ.பி.டி.பி. உள்ளிட்ட சில குழுக்கள் தற்காப்பு என்ற போர்வையில் ஆயுதங்களை வைத்திருந்து அழிவுகரமான வேலைகளுக்குப் பயன்படுத்தி வருகின்றன. பொதுவாக இலங்கையில் சட்டம், ஒழுங்கு, பாதுகாப்பு நடைமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கென தனித்தனியான பொலீஸ் பிரிவுகளும் பாதுகாப்புப் படையும் பல கோடி ரூபா செலவில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

இது இவ்வாறிருக்க தற்பாதுகாப்பு என்ற போர்வையில் ஈ.பி.டி.பி. உள்ளிட்ட சில தமிழ்க் குழுக்கள் ஆயுதங்களைப் பயன்படுத்தி சட்டவிரோதமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கடந்தகால அரசு அனுமதியையும் ஆதரவையும் வழங்கியிருந்தது. 1996இன் பின்னர் சந்திரிகா அரசினது அனுசரணையுடன் பாதுகாப்புப் படையினரின் தயவில் இருந்துகொண்டு செயற்பட்டுக்கொண்டு வருகின்ற ஆயுதம் தாங்கிய குழுக்கள் மேற்கொண்டு வருகின்ற செயற்பாடுகள் மிகவும் குரூரமானவை.

### தேர்தல்களம் கொலைக்களமானது!

கடந்த ஆண்டு ஸ்ரீலங்காவின் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலின் பின்னர் பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜன் ஈ.பி.டி.பியினரால் படுகொலை செய்யப்பட்டதுடன் அவரது குடும்பத்தினரும் குத்திக் குதறப்பட்டனர். இப்படுகொலைகளுடன் ஆரம்பமான நாசகாரச் செயற்பாடுகள் தற்போது மிகவும் பயங்கரமாக விஸ்வரூபமெடுத்துள்ளது. தமது தமிழின விரோத செயற்பாடுகளினால் மக்களின் நன்மதிப்பை இழந்திருந்த ஈபிடிபியினர் நடந்து முடிந்த ஸ்ரீலங்காவின் 12ஆவது நாடாளுமன்றத் தேர்தலை வன்முறை மூலம் தமக்கு சாதகமாக்க ஆயுத வன்முறையில் ஈடுபட்டனர். இதனால் யாழ். தேர்தல் களம் கொலைக்களமாக மாறியிருந்தது.

இக்காலப்பகுதியில் தீவுப் பகுதியில் பல அப்பாவிகள் வெட்டியும் குத்தியும் சுட்டும் சின்னாபின்னப்படுத்தப்பட்ட பயங்கரமான சம்பவங்கள் தேர்தலின் இயல்பு நிலையினை மிகமோசமாக பாதித்திருந்தன.

சாதாரண வாக்காளர் தொடக்கம் தேர்தலை நடுநிலையில் நின்று நடத்துகின்ற உத்தியோகத்தர்கள் வரை வேறுபாடின்றித் துப்பாக்கி முனையில் அச்சுறுத்தப்பட்டனர்.

ஈபிடிபியினரின் நாசகாரச் செயற்பாடுகளுக்கு எதிரான போக்கைக் கடைப்பிடித்து வந்த யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் விடுதியில் மாணவர்கள் மிகவும் செறிவாகத் தங்கியிருக்கும் பகுதியில் இராணுவத்தின் அனுசரணையுடன் கைக்குண்டுகளை வீசி மாணவர்களைப் படுகொலைசெய்ய முயற்சித்தனர்.

### கொலை அச்சுறுத்தல்

தமது அடாவடித்தனங்களைக் கண்டும் மௌனிகளாக இருக்க வேண்டும் என பல்கலை மாணவர்களுக்கு படுகொலை அச்சுறுத்தல்கள் விடப்படுகின்றன. தேர்தல் தினத்தன்று ஈ.பி.டி.பியினரது தேர்தல் மோசடிகளுக்கு ஒத்துழைப்பு வழங்க மறுத்த மாணவர்கள் மற்றும் தேர்தல் கண்காணிப்பாளர்கள் தாக்கப்பட்டனர். அதேதினத்தில் பல்கலைக்கழக சமூகவியல்துறை விரிவுரையாளரும் அவரது சகோதரரான பல்கலைக்கழக மாணவனும் இவர்களினால் மிக மோசமான முறையில் தாக்கி படுகாயப்படுத்தப்பட்டனர். இன்னும் சில பல்கலைக்கழக மாணவர்களை படுகொலை செய்வதற்குத் திட்டம் தீட்டி வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து நடுநிலைமையாகச் செயற்பட்டு வருகின்ற 'உதயன்' பத்திரிகையின் பொறுப்பான அதிகாரிகளைப் படுகொலை செய்யப்போவதாக நெடுநாளாக அச்சுறுத்தி வந்ததுடன் தேர்தலின் பின்பு அவர்களைப் படுகொலை செய்யவும் எத்தனித்து வருகின்றார்கள்.

அரசுக்கு ஆதரவான ஆயுதக்குழுக்களின் ஆயுதக்கலாசார அடாவடித்தனங்களையும் அட்டூழியங்களையும் மக்கள் மிகுந்த பீதியின் மத்தியில் வாய்மூடி சகித்து வருகின்றார்கள். இக்குழுக்களின் நடமாட்டமுள்ள பிரதேசமெங்கும் கருத்துச் சுதந்திரம மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இயல்பான அமைதி நிலை மலையேறி அச்சம் நிரம்பிய மயான அமைதியாக அரச கட்டுப்பாட்டில் உள்ள தமிழ்ப் பிரதேசங்கள் மாறிக்கொண்டிருக்கின்றன.

### ஏமாற்றுப் பொம்மை

கடந்தகால அரசு, எமது பிரச்சினையில் அக்கறையுள்ள வெளிநாடுகளை ஏமாற்றுவதற்காக ஈ.பி.டி.பி. அமைப்பை ஓர் ஏமாற்றுப் பொம்மையாகப் பயன்படுத்தி வந்தது. அவ்வமைப்புக்கு ஆயுதங்களைத் தாராளமாக வழங்கி ஒரு துணைப்படையாக உருவகப்படுத்தி வன்முறைகளில் ஈடுபட வழி ஏற்படுத்திக் கொடுத்தது.

ஈ.பி.டி.பி.அமைப்பினர் தமது ஆயுதக்கலாசார அடாவடித்தனங் களை நியாயப்படுத்தும் விதமாக தவறான பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். அதாவது தாம் மக்களுக்கு சேவை செய்வதனை விரும்பாத புலிகள், தம்மைக் கொலை செய்வதிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக தாம் ஆயுதங்களை வைத்திருப்பதாகப் பிரசாரப்படுத்துகின்றார்கள். உண்மையில் தமிழ் மக்களின் நலனில் அக்கறையுள்ள, தமிழ் மக்களின் நிம்மதியான வாழ்விற்காக உழைக்கின்ற எவரையும் புலிகள் இதுவரை குறிவைத்தது கிடையாது.

ஆகவே புலிகளிடமிருந்து ஈ.பி.டிபியினர் அச்சுறுத்தலை எதிர்நோக்குவதாக இருப்பின் அதன் அர்த்தம் இவர்களினுடைய பார்வை (ஈ.பி.டி.பியினரின்) தமிழ் மக்களின் நலனுக்கு விரோதமானது; தேசத்துரோகத்துக்கு ஒப்பானது என்பதாகும். எனவே அப்படியான நிலைப்பாட்டினைக் கொண்டிருக்கின்ற கட்சிகளை அரசு கைப்பொம்மையாகப் பயன்படுத்துவது சிக்கலான கட்டத்தை அடைந்திருக்கின்ற எமது இனப்பிரச்சினையை மேலும் சிக்கலாக்குவதற்கு ஏதுவாக அமையும்.

### தமிழ் மக்கள் விசனம்

தங்களினுடைய ஐக்கிய தேசிய முன்னணி அரசு தேர்தல் விஞ்ஞாபனத்தின்போது முன்வைத்த விடயத்தினை இங்கு குறிப்பிட விரும்புகின்றோம். 'புதிதாக அமையவிருக்கும் ஐ.தே.க. அரசில் ஈ.பி.டி.பியினர் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள். அவர்களினுடைய ஆயுதங்கள் யாவும் உடனடியாகக் களையப்படும்' - என்பதாகும்.

ஆனால் தற்போது ஐ.தே.க. அரசு ஈ.பி.டி.பியினருடன் பேச்சுக்களை நடத்தி வருகின்றமை தமிழ் மக்கள் மத்தியில் பெரும் விசனத்தையும் அதிருப்தியையும் ஏமாற்றத்தையும் ஏற்படுத்தி வருகின்றது. தமிழ் மக்களின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கும் ஈபிடிபியினருக்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது. இதனை கடந்த தேர்தலின்போது தமிழ் மக்கள் நிரூபித்துக் காட்டியிருந்தனர்.

கடந்தகால அரசு தமிழர் பிரச்சினையை நேர்மையான வழியில் தீர்ப்பதை விடுத்து சிக்கல் நிறைந்த குறுக்குவழிகளைக் கையாண்டது. ஈபிடிபி. போன்ற தமிழின விரோத அமைப்புகளைக் கைப்பொம்மையாகப் பயன்படுத்தி அவர்களுக்கு ஆயுதங்களைக் கொடுத்து எமது பிரச்சினையை மேலும் சிக்கலாக்கியது. அதுபோல அல்லாது தற்போது ஆட்சியில் இருக்கின்ற அரசு இக்குழுக்களிடமிருந்து முழு ஆயுதங்களையும் களைந்து நாம் வாழும் தேசங்களிலிருந்து இக்குழுக்களின் அச்சுறுத்தல் எதுவும் இன்றி நாம் வாழ்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

- என்றும் அந்தக் கடிதத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. (க-6)

## பேராயருக்கு கௌரவம்

யாழ்ப்பாணம்,டிசெ.29

பேரறிஞர் விருதினைப் பெறும் தென்னிந்திய திருச்சபைப் பேராயர் வண. ஜெபநேசனைக் கௌரவிக்கும் வைபவம், இன்று சனிக்கிழமை மதியம் கொக்குவில் மேற்கில் உள்ள புனித அந்திரேய ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த வைபவத்தில் பலரின் பாராட்டுரைகள் இடம்பெறும். அத்துடன சிறுவர்களுக்கான நத்தார் நிகழ்ச்சிகள், பரிசில் வழங்கல் ஆகியனவும் நடைபெறும். (க-3)

## பொ.ஐ.முன்னணி அரசியல்வாதிகள் 20 பேர் கைது!

கொழும்பு,டிசெ.29

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த பிரதேச சபைத் தலைவர்கள், உறுப்பினர்கள் 20 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். தேர்தலில் முறைகேடுகளில் ஈடுபட்டதாக இவர்கள் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

போதிய சாட்சியங்கள் இன்றி இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று சுதந்திரக்கட்சி சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்திருக்கின்றது. (க)

## கலந்துரையாடல்

வலிகாமம் மேற்கில் இயங்கும் சனசமூக நிலையங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோருக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வலி.மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரும் பங்குபற்ற விருக்கின்றார். (க-3)

## அரச ஊழியருக்கான கொடுப்பனவுகள் நிறுத்தப்படமாட்டா

பொ.ஐ.முன்னணி அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுவந்த விசேட கொடுப்பனவுகள் மற்றும் உதவிகள் என்பன தொடர்ந்தும் வழங்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

கடந்த ஆட்சிக்காலத்தில் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சில கொடுப்பனவுகள் புதிய அரசின் ஆட்சியில் நிறுத்தப்படவிருப்பதாக வெளியான தகவல்கள் தவறானவை எனவும் - அந்தக் கொடுப்பனவுகள் யாவும் தொடர்ந்தும் வழங்கப்படும் எனவும் - சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க-4)

## புதிய பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களை மன்னார், முல்லைத்தீவுக்கும் நியமிக்க வேண்டும்

### அடைக்கலநாதன் எம்.பி. அமைச்சுச் செயலருக்கு கடிதம்

வவுனியா,டிசெ.29

வடக்கு - கிழக்கில் புதிதாக நியமனம் செய்யப்படவுள்ள பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களை ஆசிரியப் பற்றாக்குறை உள்ள மன்னார், முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளுக்கும் நியமனம் செய்யுமாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரைக் கேட்டுள்ளார்.

இது குறித்த கடிதம் ஒன்றையும் அவர் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைத்துள்ளார். அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் தேர்தல் தொகுதிகளில் கல்வியில் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள மன்னார், முல்லைத்தீவு நிர்வாக மாவட்டங்களாகும். இப்பிரதேசங்களில் போர் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மிகவும் பின்தங்கிய நிலையில் பல கிராமப் பகுதிகள் உள்ளன. இப்பகுதி மாணவர்களின் கல்வி வளர்ச்சி பற்றி கூடுதலான அக்கறைகாட்ட வேண்டியது அனைவரினதும் அவசியமான கடமையாகும்.

பட்டதாரி ஆசிரியர்களுக்கான நியமனம் வழங்கப்படும் இவ்வேளையில் கல்வியில் பின்தங்கிய நிலையில் உள்ள மன்னார், முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கல்வி வலயங்களில் வலய ரீதியில் மிகவும் பின்தங்கிய பகுதிகளிலுள்ள கிராமப்புறப் பாடசாலைகளைக் கவனத்தில் எடுத்து அவைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

விசேட விதமாக மன்னார் நிர்வாக மாவட்டத்தின் மன்னார், மடு கல்வி வலயப் பாடசாலைகளில் கவின்கலைப் பட்டதாரி ஆசிரியர் இல்லாதிருப்பதையும் இங்கு சுட்டிக்காட்டி, மேற்படி வலயங்களுக்குரிய பாடசாலைகளில் இவ்வாசிரியர்களையும் ஏனைய பட்டதாரி ஆசிரியர்களையும் நியமனம் செய்வதற்கு ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன்

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் சில மாவட்டங்களில் ஆசிரியர்கள் கூடுதலாக இருப்பதும், சில மாவட்டங்களில் பெரும் பற்றாக்குறை இருப்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். எனவே எவ்வித பாகுபாடுமின்றி, வடக்கு - கிழக்கில் உள்ள அனைத்துக் கல்வி வலயங்களும் சமநிலை அடையும் வகையில் தற்போதைய நியமனங்கள் வழங்கப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

- என்று அதில் உள்ளது.(க-7)

## யாழ்.மாநகர சபையின் பொன்விழா ஜனவரியில்

யாழ்ப்பாணம்,டிசெ.29

யாழ்.மாநகரசபையின் பொன்விழா ஆண்டுக்கொண்டாட்டங்கள் எதிர்வரும் ஜனவரி மாத பிற்பகுதியில் நடைபெறவுள்ளன.

இப்பொன்விழாக் கொண்டாட்டங்களை முன்னிட்டு யாழ்.மாநகரசபை பொன்விழா ஏற்பாட்டுக்குழு மாவட்டரீதியில் சைக்கிள், மரதன் ஓட்டப் போட்டிகளை நடத்துவதற்கும் பொன விழா மலர் ஒன்றை வெளியிடுவதற்கும் தீர்மானித்துள்ளது.

பொன்விழா மலருக்கு யாழ்மாநகர சபை தொடர்பான வரலாற்று ஆவணங்கள், தரமான ஆக்கங்கள் மற்றும் புகைப்படங்களை வழங்க விரும்புவோர் எதிர்வரும் ஜனவரி மாதம் 8 ஆம் திகதிக்கு முன்னர் பொன்விழா ஏற்பாட்டு அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது தபால் மூலமோ அனுப்பி உதவுமாறு பொன்விழா ஏற்பாட்டுக் குழு அமைப்பாளர் சுகிர்ஸ்லி கணேசன் தெரிவிததுள்ளார். (க-8)


**ST.JAMES NURSERY SCHOOL NALLUR**

**பரி.யாக்கோபு பாலர் பாடசாலை நல்லூர்**

உள்ளூராட்சி திணைக்களத்தினால் தெரிவுசெய்யப்பட்ட மாதிரிப் பாலர் பாடசாலை (MODEL PRE - SCHOOL)

☆ பாடசாலையில் சேர்க்கும் பிள்ளைகளின் வயது:- $3^+$, $4^+$

☆ அனுமதிப்பத்திரம் பெற்று பூர்த்தி செய்து ஒப்படைக்கப்படும் காலம Dec.30 - Jan. 3

☆ பாலர் பாடசாலை ஆரம்பமாகும் திகதி:
ஜனவரி 7 திங்கட்கிழமை காலை 9 மணி

முகாமையாளர்,
பரி.யாக்கோபு பாலர் பாடசாலை, நல்லூர்.

(C/20046)



**முதல் முறையாகத் திறந்தவெளி அரங்கில்**

யாழ்.முன்னணி இசைக் கலைஞர்களுடன்
யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இணைந்து வழங்கும்

**மாபெரும் இசைமழை**

**உதய கீதங்கள்**

(யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் வளர்ச்சி நிதிக்காக)

இடம் : யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு மைதானம்
நாள் : 31.12.2001 திங்கட்கிழமை
நேரம் : மாலை 6.00 மணி

இவ்வருடத்தின் இறுதி நாளை களிப்புடன்
கழித்திட யாவரும் வாரீர்!

விழா சிறப்புற விளம்பர அனுசரணை:
**லாவண்யா பல், மூக்கு கண்ணாடியகம்,**
552, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(96390)

# சம்பியாவில் நேற்று தேர்தல்கள்: வாக்கு எண்ணும் பணி ஆரம்பம்

லுஸாகா,டிசெ.29

தென்னாபிரிக்க நாடான சம்பியாவில் ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களின் வாக்களிப்பு நேற்று இடம்பெற்றது. வாக்குகளை எண்ணும் பணி உடனடியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த ஜனாதிபதித் தேர்தலில் 11 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். கூடவே 150 நாடாளுமன்ற ஆசனங்களுக்கான பொதுத்தேர்தலில் பல நூற்றுக்கணக்கான வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.



ஒருகோடிக்கு மேற்பட்ட சனத் தொகையைக் கொண்ட சம்பியாவில் நேற்றைய வாக்களிப்பின் போது 20 லட்சத்து 60 ஆயிரம் வாக்காளர்கள் வாக்களித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுநலவாய நாடுகள், ஐரோப்பிய யூனியன், ஆபிரிக்க சமூகநிறுவனம், தென்னாபிரிக்க முன்னேற்ற அமைப்பு ஆகிவற்றைச் சேர்ந்த 300 பேர் இந்தத் தேர்தல்களில் வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களாகச் செயற்பட்டனர். பொதுத்தேர்தல் முடிவுகள் இன்று சனிக்கிழமை வெளியாகும் என்று தெரிவிக்கப்பட்டது. (ம)

## பிளயர் அடுத்த மாதம் இந்தியா விஜயம்

லண்டன்,டிசெ.29

பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயர் அடுத்த மாதம் இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

பயங்கரவாதத்துக்கு எதிராக உலகளாவிய ரீதியில் ஏற்படுத்தப்பட்ட கூட்டணி இந்தியாவில் எந்தளவுக்குப் பயனளிப்பதாக உள்ளது என்பது குறித்தும் -

ஆப்கானிஸ்தானின் எதிர்காலத்தில் இந்தியாவின் பங்கு என்ன என்பது குறித்தும் -

இரு நாட்டு உறவுகளை மேலும் வளர்ப்பது குறித்தும் -

இந்த விஜயத்தின் போது இரு நாட்டுத் தலைவர்களும் விரிவாக விவாதிப்பர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தியா - பாகிஸ்தான் இடையேயான உறவுகள் சீர்குலைந்துள்ள நிலையில் பிரிட்டிஷ் பிரதமரின் இந்த விஜயம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. (ம)

## சோமாலியா மோதலில் 11பேர் பலி!

மொகாடிஷ்,டிசெ.29

சோமாலியாவின் தலைநகர் மொகாடிஷில் ஆயுதக் குழு ஒன்றின் இடையே ஏற்பட்ட உள்மோதல்களில் குறைந்தது 11பேர் கொல்லப்பட்டனர். மேலும் 25பேர் காயமடைந்தனர்.

சோமாலியாவில் நடைபெறும் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் கென்யத் தலைநகர் நைரோபியில் இடம்பெறும் சமாதானப் பேச்சுக்களில் கலந்து கொள்வது குறித்து கிளர்ச்சிக்குழுத் தலைவர்கள் இருவரிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடே இந்த மோதலுக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நைரோபி மாநாட்டில் இணக்கம் காணப்பட்ட ஒப்பந்தத்தில் கிளர்ச்சிக் குழுத் தலைவர் ஓமர் மொஹமட் கையெழுத்திட்டதை அவரது குழுவைச் சேர்ந்த மற்றொரு தளபதியான ஜலாகோவு எதிர்த்தார். அதனாலேயே அவர்களுக்கிடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டு இந்த மோதல் வெடித்தது.

இதனை அடுத்து தலைநகர் மொகாடிஷில் உள்ள மீடினா மாவட்டத்தை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்காக இரு தலைவர்களும் தத்தமது ஆதரவாளர்களை இணைத்து கடும் சண்டையில் ஈடுபட்டுள்ளனர். அங்கு தொடர்ந்தும் துப்பாக்கிச் சண்டைகள் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம)

### கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களை முன்னிட்டு

# பெத்தலகேம் மீதான முற்றுகை நீக்கம்!

பெத்தலகேம்,டிசெ.29

மேற்குக்கரை நகரான பெத்தலகேம் மீதான முற்றுகையை கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களை முன்னிட்டு அகற்றுவதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.

இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சு இதனை அறிவித்தது. இஸ்ரேலில் இருந்து கிறிஸ்தவர்கள் அதிகளவில் வழிபாடுகளுக்காக பெத்தலகேம் செல்ல வசதியாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அது தெரிவித்தது. இருப்பினும் இஸ்ரேலியத் துருப்புக்கள் பெத்தலகேமில் ஆங்காங்கே நிறுத்தப்பட்டிருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.



பெத்தலகேமில் உள்ள யஸீர் அரபாத்தின் உருவப்படத்தை பலஸ்தீனச் சிறுமி ஒருத்தி பார்வையிடுகின்றாள்

பெத்தலகேம் மீதான முற்றுகை அகற்றப்பட்டாலும் பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத் அங்கு செல்வதற்கு அனுமதிக்கப்படமாட்டார் என்றும் இஸ்ரேல் கூறியுள்ளது.

இஸ்ரேலிய அமைச்சர் ரவ்ஹம் ஸிவியை படுகொலை செய்த தீவிரவாதிகளைக் கைதுசெய்யாதவரை அரபாத் பெத்தலகேமுக்குள் நுழைய அனுமதிக்கப்படமாட்டார். ஜனவரி 6ஆம் திகதி பெத்தலகேமில் நடைபெற உள்ள மூவிராசாக்கள் நிகழ்வில் கலந்துகொள்ளக்கூட அவருக்கு அனுமதி வழங்கப்படாது என்றும் இஸ்ரேலிய அரசு தெரிவித்துள்ளது.

இதேவேளை - பலஸ்தீனப் பகுதிகளில் இஸ்ரேலியப் படையினரின் தேடுதல்கள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. கடந்த வியாழனன்று இடம்பெற்ற தேடுதலின்போது இஸ்ரேலியப் படையினர் 8 பலஸ்தீனர்களைக் கைது செய்தனர். இவர்கள் அனைவரும் ஹமாஸ் உறுப்பினர்கள் என்றும் அவர்கள் கூறினர். ஆனால் கைது செய்யப்பட்ட அனைவரும் அப்பாவி மாணவர்கள் என்று பலஸ்தீன வட்டாரங்கள் தெரிவித்தன. (ம)

# பின்லேடன் பாகிஸ்தானுக்கு தப்பினார் என்கிறது ஆப்கான்

காபூல்,டிசெ.29

ஒஸாமா பின்லேடன் பாகிஸ்தானுக்குத் தப்பிச் சென்றுவிட்டதாக ஆப்கானிஸ்தான் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

ஆப்கான் பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் மொஹமட் ஹமீல், காபூலில் இதனைத் தெரிவித்தார்.



கடைசியாக வெளியிடப்பட்ட ஒஸாமா பின்லேடனின் ஒளிப்பதிவு நாடா அல்ஜெஸிரா தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டபோது அதனை ஒருவர் பார்வையிடுகிறார்.

பாகிஸ்தானில் உள்ள அடிப்படைவாத முஸ்லிம் தலைவரான முல்லா பஸஹுர் ரஹ்மானின் பாதுகாப்பில் அவர் ஆபத்துக்கள் ஏதுமின்றி இருப்பதாகவும் ஹமீல் கூறினார்.

ஆனால் ரஹ்மான் ஏற்கனவே வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். அவரது பாதுகாப்பில் பின்லேடன் இருக்கிறார் என்று கூறுவது நகைப்புக்கிடமானது என்று பாகிஸ்தானில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

பின்லேடன் ஆப்கானிஸ்தானை விட்டு தப்பி இருக்கலாம் என்பதை அமெரிக்காவும் ஏற்றுள்ளது. பின்லேடன் வெளிநாடு ஒன்றுக்குத் தப்பிச் சென்றிருக்கக்கூடும் அல்லது இறந்திருக்கக்கூடும் என்று செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் ரொனால்ட் ரம்ஸ்பீல்ட் தெரிவித்தார்.

பின்லேடன் விவகாரத்தால் என்ன செய்வதென்று அறியாது அமெரிக்கா தலையைப் பிய்த்துக் கொண்டிருக்கிறது என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஒருபுறம் பின்லேடன் ஆப்கானை விட்டுத் தப்பிவிட்டார், இறந்து விட்டார் என்றெல்லாம் செய்திகள் வெளியாகிக்கொண்டிருக்கும் அதேநேரம் ஆப்கானில் பின்லேடனைத் தேடும் பணிகளில் அமெரிக்கப் படையினர் தொடர்ந்து ஈடுபட்டுவருகின்றனர். (ம)



இந்தியாவின் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் தீவிரவாதிகளின் மறைவிடம் ஒன்றிலிருந்து இந்திய பொலீஸாரால் கைப்பற்றப்பட்ட ஒரு தொகுதி ஆயுதங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளதை படத்தில் காணலாம்.

### ஆயுதக் குழுக்கள் கப்பம் கோருகின்றன

# கந்தகாருக்கு உணவு அனுப்பமுடியாத நிலை

### உலக உணவுத் திட்டம் அறிவிப்பு



அகதிக் குடும்பம் ஒன்று

காபூல்,டிசெ.29

ஆப்கானிஸ்தானின் தெற்குப் பகுதி நகரான கந்தகாருக்கு உதவிப் பொருள்களை அனுப்புவதற்கு இடைவழியில் உள்ள சிறு ஆயுதக் குழுக்கள் இடையூறுகளை ஏற்படுத்தி வருவதாக உலக உணவுத் திட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதனால் கந்தகாருக்கு உதவிப் பொருள்களை அனுப்பமுடியாதுள்ளதாக அவர்கள் அறிவித்துள்ளனர்.

"உதவிப் பொருள்களை எடுத்துச் செல்லும் ட்ரக்குகளை வழிமறிக்கும் இத்தகைய ஆயுதக் குழுக்கள், அவை தொடர்ந்து செல்லவேண்டுமானால் தமக்கு ஒரு தொகை வழங்கப்பட வேண்டும் என்று பேரம் பேசுகின்றன" - என்று உலக உணவுத் திட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கந்தகாரில் 2 லட்சத்து 30ஆயிரம் பேர் உள்ளனர். தற்போது இவர்களுக்கான உணவு உதவிப் பொருள்களைக் கூட அனுப்பமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

"பிரச்சினை என்னவென்றால், கந்தகார் பாதுகாப்பற்ற பிரதேசமாக இருக்கின்றது. நகரம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் ஆங்காங்கே தொடர்ந்தும் சண்டைகள் இடம்பெற்றுவருகின்றன. அங்கு, அதிகாரசபை, கட்டுப்பாடு, பாதுகாப்பு என்பன தேவைப்படுகின்றன. இதனால் தற்போது ஐ.நா.உதவி நிறுவனங்களால் கந்தகாருக்குச் செல்ல முடியாது."

- இவ்வாறு தெரிவித்தார் உலக உணவுத் திட்ட அதிகாரி ஜோர்டன் டை.

உதவிப் பொருள் ஏற்றிய ட்ரக் ஒன்று கந்தகார் நகருக்குள் நுழைவதற்கு 100 அமெரிக்க டொலர்களைத் தமக்கு வழங்கவேண்டும் என்று ஆயுதக் குழுக்கள் பேரம் பேசுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை -

கந்தகார் நகரில் எந்தச் சண்டையும் இடம்பெறவில்லை. வழமை போன்று வாகனத் தொடர்கள் நகருக்கு வந்தவண்ணமே உள்ளன என்று கந்தகாரின் புதிய ஆளுநரின் பேச்சாளர் பஸ்துன் தெரிவித்தார்.

"கந்தகார் நகரம் முழுப் பாதுகாப்பாக உள்ளது. ஐ.நா.உதவிப் பணியாளர்கள் நகருக்கு மீண்டும் வரமுடியும். உணவு உதவிப் பொருள்களைக் களஞ்சியப்படுத்தி வைக்கவென கந்தகாரில் மூன்று - மிகப் பெரிய வீடுகளை அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது" - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம)



# இந்திய வான் பரப்பில் பறக்க பாக். விமானங்களுக்குத் தடை

### அந்த நாடும் பதில் நடவடிக்கை

புதுடில்லி,டிசெ.29

எதிர்வரும் முதலாம் திகதி முதல் இந்திய வான் பரப்பில் பாகிஸ்தான் விமானங்கள் பறப்பதற்கு இந்தியா தடை விதித்துள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு பிரதமர் வாஜ்பாய் தலைமையில் கூடிய தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது.

பதிலடியாக தனது வான்பரப்பில் இந்திய விமானங்கள் பறப்பதற்கு பாகிஸ்தானும் தடை விதித்துள்ளது. இந்தியாவின் தடை அறிவிப்பு வெளியான சிலமணி நேரங்களிலேயே பாகிஸ்தானின் அறிவிப்பும் வெளியானது.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் மேலும் விரிசல் ஏற்பட்டுள்ளது என்பதையே இந்தச் செயற்பாடுகள் காட்டுவதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் -

புதுடில்லியில் உள்ள பாகிஸ்தான் தூதரக ஊழியர்களின் எண்ணிக்கையை உடனடியாக அரைவாசியாகக் குறைத்துக்கொள்ளுமாறு இந்தியா பாகிஸ்தானுக்கு தெரிவித்துள்ளது. இன்னும் 48 மணி நேரத்துக்குள் இது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் இந்தியா நேற்று அறிவித்தது.

எஞ்சியிருக்கும் தூதரக ஊழியர்களும் புதுடில்லி மாநகர எல்லைக்கு வெளியே செல்லக்கூடாது எனவும் இந்தியா உத்தரவிட்டுள்ளது.

பதிலுக்கு பாகிஸ்தானும் தனது நாட்டில் இத்தகைய நடவடிக்கைகளை அறிவித்துள்ளது. (ம-10)

உலக அரங்கில்

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம்

We Serve

2002 புத்தாண்டை நீதியான சமாதானத்தை வேண்டி நம்பிக்கையுடன் வரவேற்பதுடன் நன்மதிப்புக்குரிய சமயப் பெரியார்கள் சமூகத்திற்கு ஆற்றிவரும் சேவையைப் பாராட்டி

## கௌரவிக்கும் நிகழ்வு

*காலம்:* நாளை (30.12.2001) ஞாயிறு காலை 10 மணிக்கு
*இடம்:* மானிப்பாய் பிரதேச சபை மண்டபம்

"நொய்ந்த மனத்தோனை மகிழ்விப்பேனாக
ஆதரவற்றோர்க்கின்னருள் அளிப்பேனாக
ஒரு சோகக் கண்ணீரைத் துடைப்பேனாக
பயந்த மனதைச் சாந்தி செய்வேனாக."

என்பதையே குறிக்கோளாகக் கொண்டு சர்வதேச ரீதியாக லயன்ஸ் கழகத்தினராகிய நாம் சமயத்தொண்டுடன் சமூக மேம்பாட்டுக்காகவும் நலிவுற்றோருக்கும், ஆதரவற்றோருக்கும் அளப்பரிய சேவைகளை ஆற்றி வரும் நன்மதிப்புக்குரிய சமயத் தலைவர்களான

**சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி** அவர்களையும
**பேராயர் பேரறிஞர் கலாநிதி எஸ்.ஜெபநேசன்** அவர்களையும்
**செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்** அவர்களையும்

வாழ்த்திக் கௌரவிப்பதில் பெருமை அடைகின்றோம்.

லயன்
எஸ்.எஸ்.தங்கராஜா,
சேவை இணைப்பாளர்

லயன் டாக்டர்
நவமலர் கனகரத்தினம்,
கழகத் தலைவர்.


# மரண அறிவித்தல்கள்

## S.M.அன்ரன் கிறிஸ்ரி

கரம்பொன்னைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட S.M.அன்ரன் கிறிஸ்ரி(26-12-2001) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சலமோன்பிள்ளை சவிரிமுத்து - விக்ரோறியா தம்பதியினரின் அன்பு மகனும், மாறி கிறிஸ்ரபெல் ஐறா(பபி) அவர்களின் அன்புக் கணவரும், கிறிஷான்ரன்(இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி), அலிஸ்ரன்(யா/புனித சாள்ஸ் மகாவித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஆசிரியர் S.M.யோசெவ், செல்வி ஜசிந்தா சவிரிமுத்து(ஆசிரியை, யா/கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்), காலஞ்சென்ற கிப்பொலிற்றா(பவளம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருமதி டெலா யோசெவ், S.பங்கிராஸ், கிரிஷாந்தா(ஜேர்மனி), புளோறன்ஸ (வவுனியா), ரேமண்ட் (ஹொலண்ட்), ஜெறாட், யூடிற்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(29-12-2001) சனிக்கிழமை மாலை 3 மணிக்கு யாழ்.கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
S.M.யோசெவ்
*(சகோதரன்)*

*27/1, குருசோ வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(96440)

## தம்பையா நவரட்ணம்
## (சந்திரன்)

சங்கானையைப் பிறப்பிடமாகவும், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா நவரட்ணம் (சந்திரன்) 25.12.2001 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - பாக்கியம் தம்பதியினரின் மருமகனும், துரையம்மாவின் அன்புக் கணவரும், லலினாதேவி (பிரான்ஸ்), கயதீஸ்வரன்(லண்டன்), சசிகலாதேவி, நிர்மலாதேவி, சத்தியவேந்தன் (3ஆம் வருட கலைப்பீடம் - யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், எஸ். சந்திரகுமார் (பிரான்ஸ்) அவர்களின் அன்பு மாமனாரும், மிதுர்ஷன், சாருஜன் ஆகியோரின் அன்புப்பேரனும், இராசமலர், காலஞ்சென்ற தங்கராசா மற்றும் தியாகராசா, இராசரத்தினம், இந்திராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்லத்துரை குலசேகரம் (நிருத்திகா ஜுவல்லறி) அவர்களின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2001) சனிக்கிழமை அன்னாரின் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந.சத்தியவேந்தன்
(மகன்)

*பட்டினசபை வீதி,*
*மானிப்பாய்.*

(96384)

## யாழ். பல்கலை மாணவர் ஒன்றிய கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,டிசெ.29

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் கலந்துரையாடல் ஒன்று இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு மாணவர் நிலைய கட்டடத்தில் நடைபெறும்.

இதில் யாழ்.பல்கலைக்கழக அனைத்துப் பீட மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு பல்கலைக் கழக மாணவர் ஒன்றியச் செயலாளர் எம்.சுகுனேஸ்வரன் அறிவித்துள்ளார்.

(ம-8)

## மட்டுவில் மாணவருக்கு!

தென்மராட்சி,டிசெ.29

மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை ஜனவரியில் மீண்டும் சொந்த இடத்தில் இயங்கவுள்ளதால் இப் பாடசாலையில் இணைந்து கல்வி பயிலவுள்ள மாணவர்கள் எதிர்வரும் ஜனவரி ஐந்தாம் திகதிக்கு முன்னர் பாட சாலை அதிபரிடம் பெயர்களைப் பதிவு செய்யுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

மட்டுவில், நுணாவில், கைதடி நுணாவில் பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களும் இப்பாடசாலையில் இணைந்து கல்வி பயில முடியும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

(ம-117)

## ஒளி விழா

அரியாலை,டிசெ.29

யாழ்.பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் நடத்தும் கிறிஸ்மஸ் ஒளிவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சங்கத்தின் கேட்போர் கூட மண்டபத்தில் சங்கத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் தலைமையில் இடம்பெறும்.

(க-17-51)

## ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம்,டிசெ.29

உள்ளூராட்சித் திணைக்கள யாழ்பிராந்திய அலுவலகத்தின் வருடாந்த ஒன்றுகூடல் எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு நலன்புரிச் சங்கத் தலைவர் க.இராமச்சந்திரா தலைமையில் நடைபெறவுள்ளது.

(ஐ-8-10)

## ஐந்து ஆண்டுகள்

17-04-1939 29-12-1996



**நெஞ்சிருக்கும் வரை**
**உன் நினைவிருக்கும்**
**அம்மா!**

- உன் குடும்பம்.

*வாசுகி ஆனந்தன்,*
*143/27, எல்லை வீதி,*
*மட்டக்களப்பு.*

(C/20027)




CONGRATULATIONS TO
Bishop **Rt.Rev.Dr.S.Jebanesan**
on gaining I.B.C. award
for Religion & Philosophy
and to have been recognized
as one of the 2000 outstanding scholars.

**Jaffna College Alumni Association**
**Parent body,**
**Vaddukoddai.**

(96358)



**புதிய உயர் கல்லூரி**
**யாழ்., பேராதனைப் பல்கலைக்கழக**
**வெளிவாரி பட்டப்படிப்பு மாணவ ஒன்றியத்தின்**

## "கலாதரிசனம்"
## நூல் வெளியீடு

*இடம்:* **புதிய உயர் கல்லூரி**
*நாள்:* **நாளை(30-12-2001) ஞாயிற்றுக்கிழமை**
*நேரம்:* **10.00 மணி** a.m. *(புதிய நேரம்)*
**தலைவர்:** **செல்வன் செ.கமலக்கண்ணன்**
*(ஒன்றியத் தலைவர்)*
**பிரதம விருந்தினர்:** **திரு.K.தேவராஜா**
*(வணிகத்துறைத் தலைவர், யாழ். பல்கலைக்கழகம்)*
**சிறப்பு விருந்தினர்:** **திருமதி கலைவாணி இராமநாதன்**
*(தலைவர், இந்துநாகரிகம், யாழ். பல்கலைக்கழகம்)*

### நிகழ்ச்சி நிரல்

- மங்கள விளக்கேற்றல்:
- மௌன அஞ்சலி:
- இறைவணக்கம்:
- கல்லூரிக் கீதம்:
- வரவேற்புரை : செல்வன் S.ஜெயக்குமார்
- தலைமையுரை : செல்வன் செ.கமலக்கண்ணன்
- ஆசியுரை : ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள *(நல்லை ஆதீனம்)*; வண.T.தேவநேசன *(புதிவாளர், இறையியல் கல்லூரி, மருதனார் மடம்)*
- காப்பாளர் உரை : திருமதி ச.அருள்நங்கை *(ஒன்றியக் காப்பாளர்)*
- சிறப்பு விருந்தினர் உரை : திருமதி கலைவாணி இராமநாதன *(தலைவர், இந்துநாகரிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)*
- பிரதம விருந்தினர் உரை : திரு.K.தேவராஜா *(வணிகத்துறைத் தலைவர், யாழ். பல்கலைக்கழகம்)*
- வெளியீட்டுரை : சோ.பத்மநாதன்
- முதற் பிரதி பெறுபவர் : சிவஸ்ரீ சோமஸ்கந்தராஜ குருக்கள் *(B.A. ஆசிரியர், ஹாட்லிக் கல்லூரி)*
- வாழ்த்துரை : திரு.குழந்தை ம.சண்முகலிங்கம்
- ஆய்வு உரை: திருமதி நாச்சியார் செல்வநாயகம *(தலைவர், நுண்கலைத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)*
- பதில் உரை : செல்வன் சி.சிறிதரன்
- சிறப்புப் பிரதி பெறல் :
- நன்றி உரை : செல்வன்.T.ரவிச்சந்திரன்

**யாழ்.முன்னணி இசைக் கலைஞர்களுடன் யாழ்., பேராதனை பல்கலைக்கழக வெளிவாரி பட்டப்படிப்பு மாணவர்கள் இணைந்து வழங்கும் இன்னிசை கானங்கள்.**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**புதிய உயர் கல்லூரி,**
யாழ்., பேராதனை பல்கலைக்கழக
வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவர் ஒன்றியம்.

விழா சிறப்புற அனுசரணை:-

**இ.ச.பேரம்பலம் சகோ நிறுவனம்**
பல்பொருள் விற்பனையாளர்கள
**50, 52, 54, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**வினோ நகைப் பூங்கா**
**185, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**T.P 2824.**

(96364)



## காரையம்பதி தர்மசாஸ்தாவே சரணம்

# ஈழத்துச் சிதம்பரத்தில் இன்று இரதோற்சவம்



**எத்தனை கண்கள் இருந்தாலும் அத்தனை கண்களும் போதாது**
**இன்று காரையம்பதி ஐயன் எழில் காண்பதற்கு!**



அந்தச் சிதம்பரத்தில் கண்ணனும் நீ, கணபதியும் நீ, கந்தனும் நீயே எங்கள் காவல் தெய்வம் பரமசிவன், விஷ்ணுவும் நீயே!

அண்டமெல்லாம் காத்தருளும் சக்தியுமாகிய, நம்பிச் சரண்புகுந்த நல்லவனைக் காப்பாற்றும் தயவும், கருணையும் கொண்ட அபயம் அளிக்கவல்ல கைகூப்பி நிற்கும் போது, மெய்சிலிர்க்க வைக்கும், எண்ணியதை திண்ணமுறச் செய்திடும், என்றும் உள்ள பரம்பொருள் இனியவன், பூரணை புற்கலை நாயகன், வில்லாளி வீரன், வீரமணிகண்டன், பிள்ளையார், முருகன், அம்மன், நடேசர், மாணிக்கவாசகர் ஆகியோர் ஆரோகணித்து பஞ்சரதமேறி இலங்கை - இந்திய கூட்டு நாதஸ்வர - தவில் மேதைகளின் மங்கள வாத்தியங்கள் முழங்க, பக்தர்கள் போடும் சரணகோஷம் வானத்தைப் பிளக்க, மக்கள் பக்தி வெள்ளத்தில் மிதந்து வந்து அருள் மழை பொழியும் கண் கொள்ளாக் காட்சியைக் காண வாரீர்.

*ஆக்கம்:* **காரை மணிகண்டன்**

(96362)

உதயன்

## அநாகரிகமான தாக்குதல் இது!

பிரபல பத்திரிகையாளரும் பாதுகாப்புத்துறை ஆய்வாளருமான தர்மரத்தினம் சிவராம் (தராக்கி), 'தினக்கதிர்' ஆசிரியபீடத்தைச் சேர்ந்த விஜேந்திரன் ஆகிய இருவரும் கடந்த புதன்கிழமை இரவு மதுபோதையில் வந்த காடையர் கும்பல் ஒன்றினால் கடுமையாகத் தாக்கப்பட்டிருக்கின்றனர்.

தலையிலும், கையிலும் படுகாயம் அடைந்த சிவராம், மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றார்.

மட்டக்களப்பிலிருந்து வெளியாகும் 'தினக்கதிர்' தினசரியின் ஆசிரியபீட அலுவலகத்துக்குள் புகுந்தே இந்த வெறியாட்டம் நடத்தப்பட்டிருக்கின்றது.

பொல்லுகள், கத்திகள் சகிதம் அலுவலகத்துக்குள் நுழைந்த இக்குழு வெகு 'சிம்பிள்' ஆகத் தனது கைவரிசையைக் காட்டிவிட்டு வெளியேறியுள்ளது.

தமிழரின் தேசிய உரிமையை தேசிய மட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் பிரதிபலிக்கின்ற ஓரிரு பத்திரிகையாளரில் சிவராம் முக்கியமானவர். தமிழில் மட்டுமல்லாது ஆங்கிலத்திலும் இந்தச் சேவையை அவர் ஆற்றி வருவதால் அவரது பணி சர்வதேச மட்டத்திலும் பலத்த தாக்கத்தை ஏற்படுத்தி வருவது பத்திரிகைத்துறை சார்ந்தோருக்கு நன்கு புரிந்தவிடயம்.

'தமிழ் நெற்' என்ற - சர்வதேச ரீதியில் தமிழ் மக்களின் பிரச்சினைகளையும், போர்ச் செய்திகளையும், சிங்களப் படையினரின் கொடூரச் செயல்களையும் பட்டவர்த்தனமாக அம்பலப்படுத்துகின்ற - இணையத்தள செய்தி நிறுவனத்துக்காகப் பெருமளவு பங்காற்றிவரும் சிவராம், அதன் காரணமாக சிங்கள இனவாதிகளினதும், அரசினதும் சீற்றத்துக்கு இலக்கானவர்.

இவ்வாண்டு மத்தியில் அரசு சார்புப் பத்திரிகைகள் இவரின் படத்தைப் பிரசுரித்து, புலிகளின் உளவாளி என்று குறிப்பிட்டு இவருக்கு எதிராக இனவாதரீதியில் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து முக்கியத்துவம் கொடுத்து செய்திகளை வெளியிட்ட . சிங்கள இனவாதத்தின் மற்றொரு வடிவமான சிங்கள நாளிதழ் ஒன்றும் இதே பணியை முன்னெடுத்தது.

வழக்கமாக பிரபலஸ்தர்களைக் கொல்லுவதற்கு முன்னர் அவர்களுக்கு எதிராகப் பொய்ப் பிரசாரங்கள் முன்வைக்கப்படுவது போன்ற நடவடிக்கைகள் கொழும்பில் கட்டவிழ்த்து விடப்பட்டதால் பாதுகாப்புக் கருதி, சுதந்திரப் பத்திரிகையாளர் சிவராம் தனது இருப்பிடத்தை மட்டக்களப்புக்கு மாற்றவேண்டியதாயிற்று.

தமிழ் மக்கள் செறிந்து வாழும் மட்டக்களப்பு நகரத்தில் இருப்பது தமக்கு ஓரளவு பாதுகாப்பாக இருக்குமென்று அவர் கருதியிருக்கக்கூடும். ஆனாலும் அங்கும் அவர் மீது முரட்டுத்தனமான தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது.

சிவராமின் பத்திரிகைத்துறைப் பணி காரணமாக இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் பத்திரிகை அலுவலகம் ஒன்றில் - ஆசிரியபீடத்தில் - அவரும், அவரது சகாவும் அமர்ந்திருந்து பணியாற்றிக்கொண்டிருந்த சமயம் இத தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது.

ஒரு பத்திரிகை அலுவலகத்தின் ஆசிரிய பீடத்துக்குள் சாவகாசமாக ஒரு குழு புகுந்து வெறியாட்டம் நடத்திச் சென்றிருப்பது கண்டிக்கத்தக்கது. பத்திரிகைச் சுதந்திரத்துக்கு விடுக்கப்பட்டுள்ள பெரிய அச்சுறுத்தல் இது.

தாக்குதல் குறித்து பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டும் அவர்கள் சம்பவ இடத்துக்கு உடனடியாக வரவில்லை. அடுத்தநாள் பத்திரிகை ஆசிரியர் பொலிஸ் நிலையத்துக்கு நேரடியாகச் சென்று முறைப்பாடு செய்தபின்னரே பொலிஸார் விழிப்புற்றிருக்கின்றனர். மக்களின் குரலாக ஒலிக்கும் ஒரு சுதந்திர ஊடக - பத்திரிகை - நிறுவனத்தின் பாதுகாப்புக் குறித்து பாதுகாப்பு வட்டாரங்களின் சிரத்தை இவ்வளவுதான்.

தலைநகர் கொழும்புக்கு வெளியிலிருந்து பிரசுரமாகும் பத்திரிகைகளே பெரும்பாலும் இத்தகைய அச்சுறுத்தலுக்கு உள்ளாகுகின்றன. என்றாலும்கூட தமது பணியை அச்சமின்றி ஆற்றுவதில் அவை பின்னிற்பதில்லை.

இந்தவகையில் சீரிய பணியாற்றி வரும் தினக்கதிரின் சேவை தொடரவேண்டும். பத்திரிகையாளர்கள் சிவராம், விஜேந்திரன் போன்றோர் மேலும் துணிவோடு தமது வரலாற்றுக் கடமையை - பொறுப்பை - முன்னெடுக்க வேண்டும். ஈழத்தமிழ் மக்களின் தார்மீகப் பேராதரவு அவர்களுக்கும், அவர்களது நிறுவனத்திற்கும் என்றும் உண்டு என்பது உறுதி.

# முந்திய அரசு அறிவித்த சம்பள உயர்வு கிடைக்கும்

## அமைச்சர் பீரிஸ் தகவல்

கொழும்பு,டிசெ.29

பொதுத்தேர்தலுக்கு முன்பு பொ.ஐ.முன்னணி அரசு அறிவித்த சம்பள உயர்வை அமுல் செய்வதற்கு ஐ.தே.க. அரசு தீர்மானித்துள்ளது.

இத்தகவலை கைத்தொழில் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இத்தீர்மானமானது அரசின் பொருளாதாரத்தில் கடும் தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றபோதிலும் அரசு அதை நடைமுறைப்படுத்தவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்பு அறிவிக்கப்பட்ட பதவி உயர்வுகள் யாவும் ரத்துச் செய்யப்படவுள்ளன என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ஐ-10)

# தெல்லிப்பழையில் புதிய வீதி படையினர் அமைக்கின்றனர்?

வலிவடக்கு,டிசெ.29

தெல்லிப்பழைப் பதியில் குடிமனைகள் அமைந்துள்ள இடங்கள் ஊடாக வீதி அமைக்கும் வேலையை படையினர் மீண்டும் ஆரம்பித்திருப்பதாக அப்பகுதி வாசிகள் கூறுகின்றனர்.

வீடுகள், கட்டடங்களை அகற்றி புதிய வீதியை அமைக்கும் வேலையில் படையினர் கடந்த சில வாரங்களாக ஈடுபட்டு வருகின்றனர் என்றும் - தெரிவிக்கப்படுகிறது.

இளவாலை - தெல்லிப்பழை வீதிக்குத் தெற்குப் புறமாக உள்ள மரங்கள், கட்டடங்கள் புல்டோசர் கொண்டு அகற்றப்பட்டு அங்கு புதிய வீதியை அமைக்கும் முயற்சியில் கடந்த ஆண்டும் படையினர் ஈடுபட்டது தெரிந்ததே.

வலி.வடக்குப் பிரதேச சபைத் தலைவர் மற்றும் கூட்டணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிவமகாராசா ஆகியோரின் தலையீட்டைத் தொடர்ந்து இப்பணி பின்னர் நிறுத்தப்பட்டிருந்தது.

தற்போது மீண்டும் மரங்கள் தறிக்கப்பட்டும் கட்டடங்கள் தகர்க்கப்படுவதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை -

இப்பகுதியில் இருந்த மரங்கள் விறகு வியாபாரிகளால் அதிகளவில் எடுத்து வருவதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. (ஐ-86)

## நாய்களுக்கு தடுப்பூசி

தென்மராட்சி,டிசெ.29

துன்னாலை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் உள்ள கோவில் கடவைப் பகுதியில் நேற்று வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய் தடுப்பு மருந்து வழங்கப்பட்டதாக பொதுச் சுகாதார பரிசோதகர் க.இளங்கோ தெரிவித்தார். (ஐ-117)

## தாச்சி இறுதிப் போட்டி

வலி.வடக்கு, டிசெ.29

யாழ்.மாவட்ட தாச்சி சங்கத்தினால் நடத்தப்பட்டு வந்த தாச்சிப் போட்டியின் 3ஆம் இடத்துக்கான ஆட்டமும் இறுதிப் போட்டியும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு இணுவில் அண்ணா விளையாட்டுக்கழக மைதானத்தில் தலைவர் கா.பீதாம்பரம் தலைமையில் நடைபெறவுள்ளன.

முதன்மைவிருந்தினர்களாக மானிப்பாய் பரிஸ் லயன்ஸ் கழகத் தலைவர் எஸ்.ரவீந்திரன், இலங்கை வங்கி பிராந்திய முகாமையாளர் சி.நடராசலிங்கம் ஆகியோரும், சிறப்பு விருந்தினராக கிராம அலுவலர் எஸ்.சத்திகிரீவனும் கௌரவ விருந்தினராக சு.காந்தரூபனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

3ஆம் இடத்துக்கான ஆட்டத்தில் இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகமும் மானிப்பாய் ஆனந்தா விளையாட்டுக் கழகமும் பங்குபற்றும்.

இறுதிப் போட்டியில் கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சண்டிலிப்பாய் வசந்தஸ்ரீ விளையாட்டுக் கழகம் விளையாடும். (ஐ-86)

## உதயவாக்கு

ஒவ்வொரு செயலும் எண்ணமும் மனிதனை மாற்றியமைத்து வருகிறது. நற்செயலும், நன் மொழியும், நல்லெண்ணமும் சேர்ந்து மனிதனைக் குணவானாக்குகின்றன.

## நாளை

மார்கழி 15
ஞாயிற்றுக்கிழமை
திதி : பூரணை
பிற்பகல் 5.02 வரை.
நட்சத்திரம்: திருவாதிரை
பின்னிரவு 2.04 வரை.
ஆருத்திரா தரிசன நாள்
பூரணை வீரதம்
சுபநேரம் : 9.29 - 10.59
ராகுகாலம் : 4.59 - 6.29
(பழைய நேரப்படி)

## நாட்டு நடப்பு

**சீனவெடி வெடிக்குமோ?**

பானையை ஏற்றி வைத்து
பட்டாசு கொளுத்த எண்ணி
ஆனைக் கட்சி தன்னை
அனுமதி கேட்டபோது
நோ - வேயோடு தொடர்பு கொண்டு
நோகாமல் கேட்டு விட்டாராம்
வாஜ் - பேயும் சம்மதமாம்
வருகிறதாம் சீனவெடிக் கப்பல்.

*- விகடகவி.*

# அமைச்சர் பதவி கிடைக்காததால் பழைய முகங்கள் அதிருப்தி!

அமைச்சர் பதவிகள் வழங்கப்பட்ட விதம் குறித்து ஐ.தே.கட்சியில் உள்ள பழைய முகங்கள் சில மனம் குமுறுகின்றன.

தமக்கு உரிய அந்தஸ்து வழங்கப்படவில்லை என்று சிலர் கருதுகின்றனர். தாம் புறக்கணிக்கப்பட்டிருப்பதாக வேறு சிலர் மனம் புழுங்குகின்றனர்.

ஐ.தே.கட்சியில் இணைந்து கொண்ட எஸ்.பி.திஸாநாயக்க, ஜீஎல்.பீரிஸ், மஹிந்த விஜேசேகர, பந்துல குணவர்த்தன, ரவூப் ஹக்கீம், ஆறுமுகம் தொண்டமான், லக்ஷ்மன் கிரியெல்ல ஆகியோருக்கு அமைச்சர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆனால் ஐ.தே.க வெற்றிக்கு பெருமளவு உழைத்த லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன, கேஹெலிய ரம்புக்வெல்ல, ஹேமகுமார நாணயக்கார போன்றோருக்கு அமைச்சர் பதவிகள் வழங்கப்படவில்லை.

கபினெட் அமைச்சர் பதவிகளை எதிர்பார்த்த மிலிந்த மொரகொட, ரவி கருணாநாயக்க, ராஜித சேனாரத்ன போன்றோருக்கு அப்பதவிகள் வழங்கப்படவில்லை. இது குறித்தும் ஐ.தே.கட்சி வட்டாரங்களுக்குள் அதிருப்தி நிலவுகிறது.

ஆயினும் அமைச்சர் பதவிகள் குறித்து கட்சிக்குள் எந்தக் கருத்து வேறுபாடும் இல்லை என்று ஐ.தே.க. செயலாளர் கூறுகிறார். (ஐ)

## சமயப் பெரியோருக்கு பாராட்டு விழா

சமயப் பெரியார்கள் சமூகத்திற்கு ஆற்றி வரும் சேவையைப் பாராட்டி மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம் நடத்தும் பாராட்டு விழா நாளை காலை 10மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறும். இப்பாராட்டு விழாவில் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் ஆகியோர் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளனர். (ம-8)

# சர்வவல்லமையுடையவர்களிடமிருந்து சர்வலோக நிவாரணம்...

மருந்துகளையும் மருத்துவ முறைகளையும் பொறுத்தவரை காலத்துக்குக் காலம் பல மாற்றங்கள் ஏற்பட்டு வருவதைக் காண்கின்றோம். ஆனால் திருவள்ளுவர் அன்றைக்குச் சொல்லிய 'மருந்து' இன்றைக்கும் பொருந்தக் கூடியதாக இருக்கிறது. 'மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர் வழிமுதலா எண்ணிய மூன்று' போன்றவை.

முன்னரெல்லாம் ஒரு நோயாளி வைத்தியசாலைக்குப் போவதென்றால், கூடவே கட்டாயம் மருந்துக்கெனப் போத்தலும் கொண்டுசெல்லவேண்டும். சில சமயம் ஒன்றுக்கு மேற்பட்ட போத்தல்களும் தேவைப்படலாம். அப்போதெல்லாம் மருந்துகள் பெரும்பாலும் கலவை (MIXTURE)களாகத்தான் இருந்தன. வைத்தியசாலை வார்ட்டுக்களிலும் அனைத்து நோயாளிகளின் அலுமாரிகளின் மேலும் பல்வேறு இந்த வகை வண்ணக் கலைவைகளைக் காணலாம். வரிசையாகக் காய்ச்சல் பார்த்துக்கொண்டுவரும் தாதிமார்களும், இந்தக் கலவையைக் கிளாசில் வார்த்து அவர்களைக் குடிக்கச் செய்துவிட்டுப் போவார்கள்.

வைத்திய நிலைய மருந்து கொடுக்கும் பகுதியும் 'கலகலப்பாகத்'த்தான் இருக்கும் இப்போதுள்ளது போல சரையில் கொட்டிக் கொடுத்துவிட்டு 'அடுத்தாள்' என்று சொல்ல முடியாதே! அடித்து ஆத்தி - அதுவும் போத்தல்களில் புனல் வைத்து ஊத்திக்கொடுக்க வேண்டும். அதுவரை நாமும் மூக்கைச் சுழித்துக் கொண்டு அங்கே பொறுமையாகக் காத்திருக்கவேணும்.



காளமேகப் புலவர் 'கஸ்படம்' பற்றிக் குறிப்பிடுகையில்.... வானத்திலே இருக்கும்போது அதற்குப் பெயர் முகில். அது நிலத்தில் விழுந்தபோது நீராகிறது. அதுவே பால்காரி, மோர்க்காரி, தயிர்க்காரர்களின் கைகளிலேபட்டு பால் என்றும், மோர் என்றும், தயிர் என்றும் பெயர் பெறுகிறதாம்.... இங்கும் அதே கதைதான்.... இந்தக் கலவைகளுக்கு மூலமே இங்குள்ள நல்ல தண்ணீர்தான்....

வெளியே அவுன்ஸ் கணக்குகள் பொறிக்கப்பட்ட மருந்துப் போத்தல்களும் இருந்தன. போதாமைக்கு மருந்து வழங்கப்படுகின்ற இடங்களிலே கீறிட்ட இடங்களை நிரப்புகின்ற - தேவையற்ற சொற்களை நீக்குகின்ற ஓர் அச்சிட்ட தாளைக்கூட போத்தல்மேல் ஒட்டிவிடுவார்கள். அதிலே "நாள்.... தடவைகள், சாப்பாட்டுக்கு முன்/பின்.... தேக்கரண்டி/மேசைக்கரண்டி வீதம் எடுக்கவும்" என்றிருக்கும். எல்லாவற்றுக்கும் 'குலுக்கல்' முக்கியம். அப்போதைய பேதி மருந்துகள் - பூச்சி மருந்துகளும் இப்படித்தான். அதெல்லாம் ஒரு மனித வதைதான்.... விடுமுறையில் நின்றுதான் அதை எடுக்கவேணும்.... 'சீதம்'போன பின்னர்தான் 'பத்தியச் சாப்பாடு'....

ஆங்கில மருந்துகள்தான் அப்படி என்றால் தமிழ் மருந்துகள் எனச் சொல்லப்படும் ஆயுள்வேத - சித்த மருந்துகளும் அப்படித்தான் - ஆனால் அவை சற்றுத் தடித்த கரைசலாக இருக்கும். 'எல்லாரும் கைவிட்ட பின்னர் சில்லாலை வைத்தியம்' என்பதுபோல தமிழ் வைத்தியம் சரிவராவிட்டால்தான் அக்காலத்தவர்கள் ஆங்கில வைத்தியத்தை நாடுவார்கள்.

தமிழ் மருந்துகள் அநேகமாக முலைப்பால், இஞ்சிச்சாறு, கற்பூரவள்ளிச்சாறு - இவைகளில் கரைத்துக் குடிக்கிறதாகவே இருக்கும். இதற்கெனச் சில வீடுகளிலே மருந்துச் சிரட்டையும், உரை கல்லும் ஏனைய உபகரணங்களும் இருக்கும். ஒருமுறை இந்தவகை மருந்தைக் குடித்தால்.... நெஞ்சிருக்கும் வரை அந்த நினைவிருக்கும்.... அதுவும் குழந்தைகளுக்கு இதனை ஊட்டுவதென்றால்... (குழந்தையின் நோக்கில்) காலில் ஒரு பாவி கழுத்திலொரு மாபாவி (வாயைக்) கோலி யிழுத்துத்தான்....

கலவைக் காலம் போய் குளிசை, கூட்டுக் குளிசை, சப்பிச் சாப்பிடுகிற குளிசை என்றெல்லாம் வந்துவிட்டது. 'சிறப்', 'ரொனிக்' தவிர தண்ணி மருந்து என்பதே அநேகமாக ஆங்கில வைத்தியத்தில் இப்பொழுது இல்லாமற் போய்விட்டது.

ஊசிமருந்து என்பது என்றைக்குமே இருந்து வருகிறது. அப்பொழுதெல்லாம் நல்ல கலவை போட்டுத் தருமாறு சில நோயாளிகள் டாக்டர்களைக் கேட்பதுண்டு. அதேபோல வேறு சிலர் தமக்கு ஊசிபோடும்படியும் கேட்பதுண்டு. ஆனால் ஊசியும் கையுமாகத் தாதி வருவதைக் கண்டதுமே அதுவரை நோயினால் துடித்துக் கொண்டிருந்த ஒரு நோயாளியின் நோய் பறந்து விடுவதுதான் மர்மமாகவிருக்கிறது....

இதேபோல கொழும்பிலுள்ள நம்மவர்கள் சிலர் செலான் - குளுக்கோஸ் ஏற்றிக்கொள்வதைச் 'சிக்'கெனப் பிடித்துக்கொள்கிறார்கள். முன்னர் நல்ல கலவை கேட்டுப் பெற்றதைப்போல, இடையிலே ஊசியைக் கேட்டு ஏற்றிக்கொண்டதுபோல அவர்களுக்கு செலான் - குளுக்கோஸ் ஏற்றிக்கொண்டால்தான் திருப்தி ஏற்படுகிறது. அதற்கேற்றாற்போல கொட்டாஞ்சேனை மட்டக்குளிப் பகுதிகளில் சில 'செலான் டாக்டர்'களும் இருக்கிறார்கள். ஆமாம், அவர்களின் சொந்தப் பெயர் மறந்துவிடும் அளவுக்கு அவர்களுக்கு இந்தப் பெயர் நிலைத்துவிட்டது. அவர்கள் பணிபுரியும் அந்தத் தனியார் வைத்தியசாலைகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறுகின்ற வசதியில்லாவிட்டாலும் நோயாளி ஒருசில மணித்தியாலங்கள் படுத்திருந்து செலான் போட்டுக்கொண்டு போகிற வசதிகள் இருக்கும். நோயாளியும் கண்ணைச் செருகிக்கொண்டு படுத்திருந்து அதை ஏற்றிக்கொண்டு, நோய் நீங்கப்பெற்றவராய் புத்துயிர் பெற்றுச்செல்வதைக் காணமுடிகிறது... எப்படியிருந்தாலும் அவர்கள் மகா கெட்டிக்காரர்கள்தான்.... தங்களுக்கு என்ன தேவை என்பதை சர்வவல்லமையுடைய டாக்டர்களிடமிருந்தே கேட்டுப்பெறுகிறார்கள் என்றால்....?

மீண்டும் தொடங்கிய இடத்துக்கு வருகிறேன். இதுவும் ஒரு கலக்கல் பகிடிதான். ஒரு கிழவி பேரனுடன் வைத்தியநிலையம் வந்திருந்தாள்.... அவன்தான் அனுசரணையாளனும்... மருந்து கொடுக்குமிடத்தில் கலவையைப் பெற்றவனிடம் 'நாள் மூன்று தடவை... சாப்பாட்டுக்குப் பின்னர்..... குலுக்கிக்' கொடுக்கவும் என்றவர்களிடம் இவன் கேட்டானே ஒரு கேள்வி -"கலவையையா? கிழவியையா?"

*- சன் அங்கிள்.*

## நீங்காத நினைவில் பத்தாண்டுகள்

மலர்வு 01 ✦ 12 ✦ 1930



உதிர்வு 29 ✦ 12 ✦ 1991

அமரர்

### சேவியர் அன்ரனிப்பிள்ளை குணரட்ணம்

ஆண்டுகள் பத்தாகி விட்டதப்பா!
ஆழ்ந்த துயரம் ஆறவில்லையப்பா!
உங்கள் உடல் அழிந்ததப்பா!
உங்கள் நினைவு அழியவில்லையப்பா!

*அழியா நினைவில்:*
அன்பு
*மனைவி* : திருமதி ஜொய்சி அன்ரனிப்பிள்ளை,
*மகள்மார்* : திருமதி சுபோதினி றொஷான்,
திருமதி குமுதினி அன்ரன்
திருமதி வினோதினி ஜெயந்திரன்
மற்றும்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
கனடா, அமெரிக்கா, பிரான்ஸ். (96423)

தகவல்:
F.R.F.அருள்சோதி,
*19, குருசோ வீதி,*
*யாழ்ப்பாணம்.*

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் 14 ☆ 02 ☆ 1914



மறைவு 08 ☆ 01 ☆ 2001

அமரர்

### தர்மலிங்கம் திருநாவுக்கரசு

புங்குடுதீவு, 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த அமரர் தர்மலிங்கம் திருநாவுக்கரசு அவர்கள் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்திற்கு ஆற்றிய அரிய சேவைகளை நினைவு கூர்ந்து, அவரது பிரிவால் வாடும் அவரின் குடும்பத்தினருக்கு ஆலய பரிபாலன சபையின் சார்பில் அனுதாபம் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*ஓம் சாந்தி!*

- ஸ்ரீ முத்துமாரி அம்பாள்
ஆலய பரிபாலன சபையினர்.

(96419)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

*தோற்றம்* 10 – 04 – 1940



*மறைவு* 29 – 11 – 2001

அமரர்

### சின்னக்குட்டி கணபதிப்பிள்ளை

அன்போடும் பாசத்தோடும் எம்மை வளர்த்து
நல்வழி காட்டிய எமது தந்தையே!
மாதம் ஒன்று கடந்தபோதும் - உங்கள்
நினைவுகள் எம்மைவிட்டு ஒருபோதும் அகலாது!
ஆறாது நெஞ்சம்.

*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*வெள்ளியம்பதி,*
*காளிகோயில் வீதி,*
*அளவெட்டி.* (96441)

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்.

## மட்டக்களப்பில் பஸ் விபத்து; 14 பேர் காயம்

மட்டக்களப்பு, டிசெ.29

மட்டக்களப்பு நகரில் இருந்து வாழைச்சேனைக்கு சென்று கொண்டிருந்த பஸ் ஒன்று பாதையை விட்டு விலகி தடம் புரண்டதில் அதில் பயணம் செய்த 14 பேர் படுகாயமடைந்தனர்.

சத்துருக்கொண்டான் பகுதியில் நேற்றுமுன்தினம் 11.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது. காயமடைந்த 14 பேரும் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். (ஒ-10)

## சோமவன்ஸ மீது விரைவில் சட்ட நடவடிக்கை

கொழும்பு, டிசெ.29

தற்பொழுது லண்டனில் வசித்து வருகின்ற ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக உள்ளூராட்சி அமைச்சர் ஜோன் அமரதுங்கா தெரிவித்துள்ளார். (ஐ-10)

## பன்னிரு திருமுறை பாராயணம்

யாழ்ப்பாணம், டிசெ.29

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்த பௌர்ணமித் தினத்தில் நடத்திவரும் அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப் பாராயணம் ஆகிய நிகழ்வுகள் திருவாதிரைத் தினமாகிய நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு யாழ்ப்பாணம் கந்தர் மடம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் இடம்பெறும். (ஐ-8)

## கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.29

வரையறுக்கப்பட்ட மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை விரிவுரை மண்டபத்தில் நடைபெறும். (ஐ)

## திருவாசகம் முற்றோதல்

யாழ்ப்பாணம், டிசெ.29

வட்டுக்கோட்டை கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய ஆருத்திரா தரிசன உற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமையும், திருவாச முற்றோதல் நிகழ்வு நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 6 மணிக்கும் இடம்பெறவுள்ளன. (ஐ-8)

## இராமேஸ்வரத்தில் படகு ஏற்படுத்திய பரபரப்பு!

இராமேஸ்வரம்,டிசெ.29

தமிழகம் இராமேஸ்வரம் பகுதியில் கரை ஒதுங்கிய படகு ஒன்றினால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. ராமேஸ்வரம் வடகாடு கடற்கரைப் பகுதியில் உள்ள சாலையூத்துப் பள்ளிவாசல் எதிரே கடந்த 26ஆம் திகதி இந்தப் படகு கரையொதுங்கியது.

25 அடி நீள, நீல நிற நாரிழைப் படகான இது குப்புறக் கவிழ்ந்து பாதி மூழ்கிய நிலையில் உள்ளது. படகின் மேல் பகுதியில் 'பூமரன்' என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது.

இவ்வாறான படகுகளை விடுதலைப் புலிகளே பயன்படுத்துவதாக அந்த ஊர் வாசிகள் தெரிவிக்கின்றனர். படகில் வந்தவர்களுக்கு என்ன நடந்தது என்பது தெரியாத நிலையில் அங்குள்ள மக்கள் உள்ளனர்.

இது தொடர்பாக தமிழ்நாட்டுப் புலனாய்வுத்துறையினர் தீவிர விசாரணையில் இறங்கியுள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது. (ஐ-8)

## நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,டிசெ.29

கரவெட்டி கமலரூபன் நினைவுச் சபையின் நூல் வெளியீட்டு விழாவும் பரிசளிப்பும் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு கரவெட்டி மாணிக்கவாசக வித்தியாலயத்தில் நினைவுச் சபைத் தலைவர் க.அம்பலவாணர் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் எஸ்.சிவலிங்கராசாவும், சிறப்பு விருந்தினர்களாகக் கரவெட்டி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், தென்மராட்சி கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா, கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் த.சிதம்பரப்பிள்ளை ஆகியோர் கலந்து கொள்வர். (ஐ-8)


## Jaffna College Institute of Technology
### Vaddukoddai

### உலோக வார்ப்புப் பயிற்சி நெறி

(FOUNDRY PRACTICE)

**Foundation Course in Foundry Practice**

ஆறு மாத காலத்தில் சுய தொழிலாக ஈடுபட விரும்பும் அல்லது தொழில் வாய்ப்பைத் தேடிக்கொள்ள விரும்பும் G.C.E. (O/L) வரை படித்த மாணவர்களுக்கு வடபகுதி மூலப் பொருள்களைக் கொண்டு கற்கும் பயிற்சி நெறி.

**பயிற்சி நெறி அடக்கும் கற்கை**

1. அச்சுமண் (Moulding Sand)தயாரிக்கும் முறை
2. அச்சுப்பள்ளம் (Moulds) தயாரிக்கும் முறை
3. கரு (Core) தயாரிக்கும் முறை
4. உலை (Furnace) தயாரித்து வார்ப்பிரும்பு, அலுமினியம், பித்தளை உருக்கி வார்க்கும் முறை
5. பாதுகாப்பு முன்னெச்சரிக்கை (Safety Precaution)

**உற்பத்தி செய்யும் பொருள்கள்:**

1. நீர் இறைக்கும் இயந்திர உதிரிப்பாகங்கள்
pump Casing, Impeller, Distance Piece, End shield, Cooling fan, Fan cover.
2. சமையல் பாத்திரங்கள்
தாச்சி, தோசைக்கல் போன்றவை.

**பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

விண்ணப்பப் படிவம் எமது நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம். பயிற்சி நெறிகள் 03. 01. 2002இல் ஆரம்பிக்கப்படும்.

Director,
Jaffna College Institute of Technology,
Vaddukoddai.

(C/19920)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

*அவனியில்* 23 – 07 – 1932



*அரனடியில்* 29 – 12 – 1999

### அமரர் பரமநாதர் நவரட்ணம்

*(இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்)*

அன்பின் திருவிளக்கே! பண்பின் தலைவரே!
தன்னகத்தில்லா பாசத்தின் தந்தையே!
காலத்தால் அழியாத கலங்கரை விளக்கே!
பாசத்தால் அலறுகிறோம் இரு வருடமாய்!

- குடும்பத்தினர்.

*52, A.V.றோட்,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.* (96261)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 1911 ☆ 07 ☆ 16



உதிர்வு 2001 ☆ 11 ☆ 29

அமரர்

### சின்னப்பிள்ளை சந்திரசேகர்

எமது அன்புத் தெய்வமே! நீங்கள் எம்மை விட்டு
மறைந்தாலும் உங்கள் நினைவு எம்மை விட்டு அகலாது....
உங்கள் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல
வேரக் கேணிக் கந்தனை வேண்டுகின்றோம்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி !!!

*பிரிவால் துயருறும்:*
மக்கள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

தற்காலிகமுகவரி:
*916,K.K.S.வீதி,*
*யாழ்ப்பாணம்.*

நிரந்தரமுகவரி:
*நுணாவில் மேற்கு,*
*சாவகச்சேரி.*

(96428)

# யாழ்.மக்களின் சகல பிரச்சினைகளுக்கும் படிப்படியாக நிலையான தீர்வு கிடைக்கும்

## தற்போதைய நிலைமை குறித்து அமைச்சர் மகேஸ்வரன்

யாழ்ப்பாணம்,டிசெ.29

குடாநாட்டு மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் உட்பட சகல பிரச்சினைகளுக்கும் படிப்படியாக நிலையான தீர்வைக் காண நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தற்போதைய நிலைமை விரைவிலேயே மாறிவிடும்.

- இவ்வாறு தெரிவித்தார் இந்து விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன். யாழ்ப்பாணத்தில் எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களுக்கு நிலவும் தட்டுப்பாடு, விலையேற்றம் என்பன குறித்துக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று 'உதயன்' செய்தியாளர் கேட்டபோது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குடாநாட்டு மக்களின் அவசர தேவைகளான மா, எரிபொருள்கள் என்பவற்றை எடுத்துவருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அத்தியாவசியப் பொருள்களின் சீரான விநியோகம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும் அமைச்சர்களுடனும் கலந்துரையாடி வருகின்றேன். விரைவில் நிலைமை சீராகி விடும்.

வெளிமாவட்டங்களுக்குச் செல்லும் பயண ஒழுங்குகளை நடை முறைப் படுத்தும் அலுவலகம் இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மக்கள் சிரமமின்றி வெளிமாவட்டங்களுக்குச் செல்ல வசதியாக மேலதிக விமான சேவைகளைத் தொடர்ந்து நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன.

ஜனவரி மாதம் 18ஆம் திகதியில் இருந்து யாழ்.செயலகத்தில் இந்து கலாசார அமைச்சின் அலுவலகம் இயங்கவுள்ளது.

அதன் பின்னர் அமைச்சின் சேவைகளை பொதுமக்கள் சிரமம் இன்றிப் பெற்றுக்கொள்ள வசதி கிடைக்கும்.

குடாநாட்டுக்கான தரை வழிப் பாதை திறக்கப்பட்டால் ஏராளமான பிரச்சினைகள் தீர்ந்துபோகும். அதற்கான முயற்சிகள் நடக்கின்றன - என்றும் அமைச்சர் மகேஸ்வரன் தெரிவித்தார். (ஐ-180)



கவிஞர் சோ.பத்மநாதனின் 'ஆபிரிக்கக் கவிதை' நூலின் வெளியீட்டு விழா அண்மையில் யாழ்.பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

முதற் பிரதியை துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை, பேராசிரியர் சபா. ஜெயராசாவிடமிருந்து பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம். நூலாசிரியரும் படத்தில் உள்ளார். (ஐ)

### தேங்காய் திருடியோர் சிக்கினர்

தென்மராட்சி,டிசெ.29

மீசாலைப் பகுதியில் உள்ள தென்னந் தோட்டங்களில் 4 ஆயிரம் ரூபா பெறுமதியான தேங்காய்களைத் திருடிக்கொண்டு வந்த இருவரை கொடிகாமம் பொலீஸார் கடந்த புதன் கிழமை கைது செய்துள்ளனர்.

இந்த இருவரும் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர். ஜனவரி பத்தாம் திகதி வரை அவர்களை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஐ-117)

### யோகாசனப் பயிற்சி

யாழ்ப்பாணம்,டிசெ.29

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் வெள்ளி, சனி தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 6 மணி முதல் 7 மணிவரை யோகாசனப் பயிற்சி வகுப்புகள் நடைபெற்றுவருகின்றன. (ஐ)

### சர்வமத பிரார்த்தனை

பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா நிலையத்தில் புத்தாண்டு தினமான எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி விசேட பஜனையும், சர்வமதப் பிரார்த்தனையும் இடம்பெறும்.

நாட்டில் அமைதி நிலைபெற வேண்டி அன்று மாலை 4 மணி முதல் இந்த நிகழ்ச்சிகள் நடைபெறும். (ஐ)



யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் மூன்றாவது கண்காட்சிப் போட்டி யாழ்.இந்துக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இந்துக் கல்லூரி அதிபர் அ.சிறிக்குமரன் நடாவை வெட்டி, கண்காட்சிப் போட்டியை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். யாழ்.விஞ்ஞான சங்கத்தின் தலைவர் பேராசிரியர் கே.பாலசுப்பிரமணியம், தேர்வுத்தலைவர் வைத்தியகலாநிதி என். சிவராஜா, கண்காட்சிப் பொறுப்பாளர் கலாநிதி என்.சிவயோகன் மற்றும் கலாநிதி திருமதி எல்.ரமேஸ், செல்வி என்.இரத்தினசபாபதி, கலாநிதி டி.குணராஜசிங்கம் ஆகியோரையும் படத்தில் காணலாம். (ஐ)

## அமைச்சர் சந்திரசேகரனின் பொறுப்புக்கள் பறிபோகும்?

கொழும்பு,டிசெ.29

மலையக மக்கள் முன்னணித் தலைவரும் தோட்ட உட்கட்டமைப்புகள் அமைச்சருமான பெரியசாமி சந்திரசேகரன் அமைச்சர் பதவியைத் தூக்கியெறிவாரா?

தோட்டப் புற வீடமைப்பு, மின்சாரம், தண்ணீர் விநியோகம், தெருக்கள் அமைத்தல் மற்றும் பொது வசதிகள் என்பன தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் கீழேயே முன்னர் இருந்தன.

ஆனால் புதிய அமைச்சரவையில் பெருந்தோட்டத்துறை அபிவிருத்தி அமைச்சராகவுள்ள லக்ஷ்மன் கிரியெல்லவிடம் அப்பொறுப்புகள் ஒப்படைக்கப்படவிருக்கின்றன என்று தகவல் அறிந்த வட்டாரங்கள் மூலம் அறியப்படுகிறது.

இவ்வாறு நடக்குமேயானால் அமைச்சர் சந்திரசேகரனுக்கு மட்டுமல்ல முழு மலையக மக்களுக்குமே இழைக்கப்படும் ஓர் அவமானம் என்று மலையக மக்கள் முன்னணி வட்டாரங்கள் கருதுகின்றன. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது அமைச்சரவையைத் தெரிவுசெய்த போது நுவரெலியா மாவட்டத்தில் பெரும் அதிர்ச்சி ஏற்பட்டது. இப்போது அமைச்சுப் பொறுப்புக்களும் அபகரிக்கப்பட்டால் அவ்வாறான ஒரு பதவி அவசியம் இல்லை. சுயகௌரவமும், சுயமரியாதையும்தான் முக்கியமே தவிர பதவி அல்ல என்றும் கட்சிப் பிரதிநிதி ஒருவர் குறிப்பிட்டார். (ஐ)

### நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்,டிசெ.29

யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை புதிய கல்வியாண்டிற்கான மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை ஜனவரி மாதம் 10ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறும்.

அன்றையதினம் நேர்முகப் பரீட்சையில் தெரிவுசெய்யப்படுபவர்கள் தமக்குரிய பதிவினை மேற்கொள்ளலாம் என பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-180)

### சமய சந்நிதிகளில்

நவாலி,டிசெ.29

ஆனைக்கோட்டை மூத்தநயினார் ஆலய திருவாதிரை உற்சவத் தேர்த்திருவிழா இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும்.

இன்று அதிகாலை முதல் மூல மூர்த்திகளுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து முறபகல் 11 மணிக்கு இரதோற்சவம் இடம்பெறும். (ஐ-100)

★ ★ ★

யாழ்ப்பாணம்,டிசெ.29

யாழ்.அத்தியடி ஸ்ரீசிதம்பர நடராஜ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் கடந்த 21ஆம் திகதி முதல் தினமும் அதிகாலையில் திருவெம்பாவை பூஜைகள் நடைபெற்றுவருகின்றன.

அத்தியடி இந்து இளைஞர்கள் கடந்த 21ஆம் திகதி முதல் திருவெம்பாவை பஜனையையும் நடத்தி வருகின்றனர். (ஐ-9)

★ ★ ★

திருவெம்பாவை பூஜையை முன்னிட்டு ஈச்சமோட்டை கலட்டிப் புலம் ஞானவைரவர் ஆலய தொண்டர்கள் அதிகாலை 4மணி தொடக்கம் 5.30 மணிவரை வீதி பஜனையை நடத்தி வருகின்றனர்.

இந்து இளைஞர் மன்றத் தலைவர் ந.சர்வகுணசீலன் தலைமையில் இந்த வீதி பஜனை நடைபெற்று வருகிறது. (ஐ-17)

# காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் இன்று பக்தர்களுக்குக் கண்கொள்ளாக் காட்சி

**காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை நடைபெறும் திருவாதிரை உற்சவத்தை ஒட்டி இக் கட்டுரை வெளியாகின்றது.**


ஈழமணித் திருநாட்டின் வரலாற்றுப் புகழ்பெற்ற சிவாலயங்களுள் ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படும் காரைநகர் சிவன்கோயிலும் ஒன்றாகும். மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்று அம்சங்களும் நிரம்பப் பெற்று விளங்கும் இவ்வாலயம் யாழ்.குடாநாட்டின் மேற்குப் பகுதியில் உள்ள காரைநகரில் அமைந்துள்ளது.

இந்தியாவில் உள்ள சிதரம்பரத்தல் ஆகமத்தில் சொல்லப்பட்ட விதி முறைகளுக்கேற்ப செய்யப்படுகின்ற பூசை வழிபாட்டு முறைகள் போன்று காரைநகர் சிவன்கோயிலிலும் பூசை வழிபாடுகள் நடைபெறுவதாலும் சிதம்பரத்திரல் உள்ளதைப் போல் ஐம்பத்தொரு சுடர் கொண்ட திருவாசி நடராஜர் உருவத்தைச் சுற்றி அமைந்திருப்பதாலும் இவ்வாலயம் ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படுகின்றது.

இவ்வாலயத்திலே நடைபெறும் உற்சவங்களுள் மிகவும் பிரசித்தி பெற்றது திருவெம்பாவை உற்சவமாகும். இவற்றுள் நடராஜர் இரதாரோகணமும் ஆருத்ரா அபிஷேகமும் குறிப்பிடத்தக்கன. தென்னாட்டில் உள்ள சிதரம்பரத்துக்குச் சென்று திருவாதிரை விழாவினைதத் தரிசிக்க முடியாது அகக் கண்களால் அக்காட்சியைக் காணும் அடியார்கள் ஈழத்தில காரைநகரில் உள்ள சிவன கோயிலில் தில்லை நடராஜப்பெருமானின் திருநடனக் கூத்தினை புறக் கண்களால் கண்டுகளிக்கும் வாய்பினைப் பெறுகின்றனர்.

தில்லைத் தலத்திலே நிகழ்வது போன்று திண்ணபுரத்திலும் நடராஜப் பெருமானது ஆதிரை விழா முறை தவறாது சிறப்பாகச் செய்யப்பட்டு வருகின்றது. இதனாலேயே ஈழத்தின் பல பாகங்களில் இருந்தும் மக்கள் இவ்விழாவைத் தரிசிக்க வருகின்றனர்.

இன்று ஈழத்துச் சிதரம்பரத்தில் நடராஜப்பெருமான் தனது பரிவார மூர்த்திகளுடன் பஞ்சரதங்களில் பவனிவர உள்ளார். ஈழத்துச் சிதரம்பரத்தில் மிகப்பிரமாண்டமான தேரோடும் வீதியான - மழைவெள்ளத்தால் நிறைந்துள்ள - மூன்றாம் வீதியில் பக்தி வெள்ளத்தில் திளைக்கும் பக்தர்கள் தேர் இழுத்துச் செல்லும் காட்சி மிக அற்புதமானது. பஞ்சரதங்களும் பவனிவரும்போது பார்ப்போர் உள்ளம் பக்தி வெள்ளத்தில் மூழ்கி விடும். ஐந்து தேர்களும் இருப்பிற்கு வந்த பின்னர் பிற்பகலில் பச்சை சாத்தி நடராஜப் பெருமான் தனது பரிவார மூர்த்திகளுடன் தேரில் இருந்து இறங்கி நாதஸ்வர, தவில் வித்துவான்களின் செவிக்கினியக் கானமழை பொழிய அசமானகிரியில் திருநடனம்புரிந்தவாறு தனது சபைக்கு எழுந்தருளுவார்.



மறுநாள் உதயத்தில் நிகழும் ஆருத்திரா அபிஷேகமும், ஆருத்திரா தரிசனமும் முடிந்த பின் பகல் முழுவதும் ஒன்றன் பின் ஒன்றாக நூறுக்கும் மேற்பட்ட காவடிகள் இத்திருக் கோயிலுக்கு வந்து தங்கள், தங்கள் நேர்த்திக்கடன்களை முடித்துச் செல்லும். பிற்பகல் 3 மணிக்கு நிகழும் திருவூடலும் கண்கொள்ளாக்காட்சி ஆகும். இது *'சூடினார் கங்கையாளைச் சூடிய துழனி கேட்டிங்கு ஊடினாள் நங்கையாளும்"*

- என்ற அப்பர் சுவாமிகளின் கருத்தை நினைவூட்டுகின்றது.

இவ்வாலயத்தில் ஈழத்தில் மட்டுமன்றி தமிழகத்திலிருந்து வருகை தரும் பிரபல தவில், நாதஸ்வர வித்துவான்கள் கானமழை பொழிவர். கடந்த வருடம் தமிழகத்தில் இருந்து வருகைதந்த மாம்பலம் எம்.கே.சிவா சகோதரர்கள் இரதோற்சவத்தன்று இரவு ஆறு மணித்தியாலங்கள் கச்சேரி நடத்தி அனேகரின் பாராட்டைப் பெற்றனர். இம்முறையும் தமிழகத்தில் இருந்து இன்னும் சில கலைஞர்களுடன் மாம்பலம் சிவா சகோதரர்கள் வருகை தந்துள்ளனர். அவர்களின் கச்சேரியைக் கண்டு மகிழ்வதற்காகப் பெருந்திரளான அடியவர்கள் ஆலயத்தில் ஒன்றுகூடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

உற்சவ காலங்களில் மாணிக்க வாசகர் மடாலய அன்னதான சபையினர் ஈழத்தின் பல பாகங்களில் இருந்தும் வரும் அடியார்களின் அரும்பசி களைவதற்கு அன்னதானம் செய்து வருகின்றனர்.

இம்முறையும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கி வருவதுடன் 75ஆவது ஆண்டு பூர்த்தி விழாவினையும் நாளை ஞாயிற்றுக்கிழமை வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். காரைநகர் மணிவாசகர் சபையும் திருவாசக விழாவினை நேற்றும், இன்றும் ஆலயத்தில் நடத்துகின்றது.

உற்சவ கால பத்துத் தினங்களும் அடியார்களின் போக்குவரத்து வசதி கருதி வடபிராந்தியப் போக்குவரத்துச் சபை காரைநகர் சாலையினால் விசேட பஸ் சேவைகள் நடத்தப்பட்டு வருகின்றன. காரைநகர் கடற்படையினர் அடியார்கள் ஆலயத்திற்குச் சென்று வருவதற்கு பாஸ் அனுமதிக் கெடுபிடிகள் இன்றி மிக விரைவாகப் பாஸ் வழங்கிப் பூரண

**ந.பாரதி**
**கரைநகர் செய்தியாளர்**

ஒத்துழைப்பு வழங்குவதுடன் இன்று இரவு நடைபெறவுள்ள ஆருத்திரா அபிஷேகத்தை முன்னிட்டுக் காரைநகர் பகுதியில் இரவு முழுவதும் ஊரடங்குச்சட்டத்தை முழுமையாக நீக்கியுள்ளனர். இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் இவ்வாலய திருவாதிரை உற்சவம் சிறப்புற நடைபெறுவதற்கு வேண்டிய அனைத்து ஒழுங்குகளையும் மேற்கொண்டுள்ளார். இலங்கை வானொலி தேசிய சேவையிலும், யாழ்சேவை, வானம்பாடி சேவை என்பவற்றிலும் இன்று காலை 7.30 தொடக்கம் 10.00 மணிவரை இரதோற்சவம் நேரடி அஞ்சல் செய்யப்படவுள்ளது.

திருவாதிரை உற்சவ காலங்களில் பத்தி உணர்வோடு இவ்வாலயத்திற்கு வருகைதருகின்ற பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் அனைவருக்கும் ஈழத்துச் சிதம்பர சௌந்தராம்பிகை சமேத சுந்தரேசுவரப் பெருமானின் திருவருள் கிடைக்கப் பிரார்த்திப்போமாக!

### பரீட்சை ஒத்திவைப்பு

வடக்கு - கிழக்கு பகுதியில் இன்றும் நாளையும் நடைபெறவிருந்த மாதர் அபிவிருத்தி நிலைய தையல் பயிற்சி மாணவர்களுக்கான டிப்ளோமா பரீட்சை ஜனவரி மாதம் 5ஆம், 6ஆம் திகதிகளுக்குப் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சை நடைபெறுவதால் இப்பரீட்சையை பிற்போடவேண்டியுள்ளதாக வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்கள உதவிப் பணிப்பாளர் சகல பிரதேச செயலர்களுக்கும் அறிவித்துள்ளார். (ஐ-100)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட்ஸ், சேவல் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தும் கொடுக்கப்படும். தொடர்பு:றாஜீவ், ஆனைக்கோட்டை சந்தி. T.P.: 3529, 2867 (96295)

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் பெற்றுக்கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (96415)

புறொயிலர் இறைச்சிக்கோழி விறபனைக்கு உண்டு. மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். விலை 150/-.வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு. தொடர்பு: நா.துரைசிங்கம், கோப்பாய் வீதி, உரும்பிராய். (96312)

புறொயிலர் 1Kg 150/-, கல்பேட்ஸ என்பன மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தல் இலவசம். தொடர்பு: மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். (96443)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு உண்டு. விலை: ரூபா 160/- மட்டும். மொத்தமாகவும், சில்லறையாகவும் சுத்தம் செய்தும் கொடுக்கப்படும். தொடர்பு: இல.38/10, மருதடி வீதி, சுண்டுக்குழி, யாழ்ப்பாணம். (96356)

புறொயிலர், கல்பேட்ஸ் மொத்தமாகவும், சில்லறையாகவும் வேண்டிய நிறையில் தினந்தோறும் பெற்றுக்கொள்ளலாம். புதுவருடத்தை முன்னிட்டு மலிவு விலையில் கிடைகக்கும். தொடர்பு: லக்கி, மதவடி ஒழுங்கை, திருநெல்வேலி (பலாலி வீதி). (96357)

இறைச்சிக்கோழிகள் புறொயிலர், கல்பேட்ஸ் என்பன சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். புறொயிலர் 1Kg 160/-. தொடர்பு: இல.227, பிறவுண் வீதி, (கலட்டிச் சந்திக்கு அருகில்) யாழ்ப்பாணம். (96360)

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. 1Kg 150/-. தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:சிவா, பருத்தித்துறை வீதி, கட்டப்பிராய்ச் சந்தி. (96367)

### விற்பனைக்கு

MATE 80 (மயில் பச்சைக் கலர்) அண்மையில் எடுக்கப்பட்ட பதியப்படாத மோட்டார் சைக்கிள், PANASONIC SCAK -18 ஓடியோ CD PLAYER, OSAKI VCD PLAYER என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.நந்தசீலன், டச்(பிப்பிலி) வீதி, மானிப்பாய். (96264)

பாவனையில் உள்ள நவீன கணனி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: நடராசா யசோதரன், தேவாலய முன் வீதி, குளப்பிட்டி, கொக்குவில். (96371)

றோனியோ மெசின், தமிழ் தட்டச்சு, அயன்சேவ் (இரும்புக் காசுப் பெட்டகம்) உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: V.வாசன், ஜெட் மோட்டர்ஸ் லேன், வைரவர் கோயிலடி, மயிலணி, சுன்னாகம். (96359)

நீளகோண்கள் 18", 22", 24", மைக் வகைகள் அம்பிளிவயர் மொடல ECA - 150 w (மொனோ) பட்டுக் குடைகள், யூனிற் (40w 16ஃ) என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ம.மயூரன், மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில். (96366)

### நாய்க்குட்டி விற்பனைக்கு உண்டு

4 மாதம் நிரம்பிய டயசோன் நாய் (பெண்) குட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு: திரு.S.தர்மரட்ணம், 361, பருத்தித்துறை வீதி, நல்லூர் ( அரசடி சந்திக்கு அருகில்). (96410)

### மணமகள் தேவை

இந்து உயர் குலத்தைச் சேர்ந்த, 32 வயதுடைய, மிருகசீரிடம் 2ஆம் பாதம், செவ்வாய்க் குற்றமற்ற, கனடா நிரந்தர வதிவிட உரிமையுள்ள மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை. குறிப்பு, புகைப்படம் என்பவற்றுடன் தொடர்புகொள்ளவும். விளம்பர இல.1424, மே/பா.உதயன். (96403)

யாழ்.இந்து கௌரவ பெற்றோர் ஜேர்மனியில் வசிக்கும் 1972.09.17 இல் பிறந்த பாவக்கிரகம் 43, 8இல் செவ்வாய் தோஷமில்லாத மணமகனுக்கு லண்டன், கனடா, ஜேர்மனி வதிவிட அனுமதியுள்ள மணமகளை விரும்புகின்றனர். தொடர்பு: விள. இல. 1430 மே/பா உதயன். (96420)

### ஆங்கிலம் விசேடமாக

O/L Distinctions, Credits பெறுபேறடைய G.A.Q., A/L, National Certificate ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும். B.Sc.(Cey) London Inter இல.85, சிவன் கோயிலடி, (கோயில் பின்புறம்) திருநெல்வேலி. (96433)

### A/L பௌதிகவியல் - 2002/2003

பௌதிகவியல், இணைந்த கணிதம் அனுபவம் நிறைந்த ஆசிரியினால மிகச் சிறப்பாகக் கற்பிக்கப்படுகிறது. அலகு ரீதியான மீட்டற் பயிற்சிகளும் தனிப்பட்ட முறையிலும கற்பிக்கப்படுகிறது. முழுப்பாடத் திட்டமும் குறுகிய காலத்தில் முடிக்கப்படும். தொடர்பு: R.பாலசுப்பிர மணியம் B.Sc (Cey), Dip.in Ed., இல.17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் (96442)

### ஆங்கில வகுப்புபிரிவு III

O/L , A/L, A/Lஇற்கு தோற்றிய பல்கலை புதுமுக மாணவர்களுக்கான வகுப்புகள் 02-01-2002 காலை 9.30 மணிக்கு ஆரம்பம். நாகேந்திரம் (ஆசிரியர்) இல.34/4 செட்டித்தெரு, நல்லூர். (I)அடிப்படையில் இருந்து கற்பிக்கப்படும். (II)33 வருட ஆசிரிய அனுபவமுள்ள விசேட பயிற்சிபெற்ற ஆசிரியரால் கற்பிக்கப்படும். (96327)

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

யாழ்நகர்ப் பகுதியில் தங்கநகை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக கொள்ளவும். தொடர்பு 14, சிவகுருநாதா லேன், பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (96353)

### வகுப்புகள்

தமிழ் தட்டச்சு, சுருக்கெழுத்து, ஆங்கிலத் தட்டெழுத்து வகுப்புகள் 01-01-2002 செவ்வாய்க்கிழமை ஆரம்பம். தொடர்பு: இல.5, அம்மன் வீதி, (வைரவர் கோயில் முன்பாக) கந்தர் மடம், யாழ்ப்பாணம். (96363)


வாராம் ஒரு முறை

யாழ். 102.0 FM அலைவரிசையில்
சனிக்கிழமை காலை 8 மணிக்கு
வன்னி 92.2 FM அலைவரிசையில்
ஞாயிறு இரவு 7.30 மணிக்கு

**சத்தியவசன**

நிகழ்ச்சிகளை செவிமடுத்து உங்கள்
கருத்துக்களை எழுதிக் கலண்டர் ஒன்றை
அன்பளிப்பாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.

சத்தியவசனம், த.பெ.1012, கொழும்பு.
E-mail: bttb@sltnet.lk

(C-19958)


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 14 | 21 |
| ☆ | ☆ |
| 02 | 12 |
| ☆ | ☆ |
| 1919 | 1999 |

### அமரர் சாமிநாதக்குருக்கள் பஞ்சாட்சரக்குருக்கள்

மூன்றாண்டுகள் சென்றதைய்யா
மாறவில்லை உம் திருவதனம்!
தேடி நித்தம் ஏங்குகின்றோம்
காணவில்லை உம் திருவுருவம்?
கூடியிருந்து அரவணைத்து வாழ்ந்த நீர் - இன்று
எம்மை விட்டுச் சென்றதேனோ?

*பிரிவால் துயருறும்:*
ப.விநாயகமூர்த்திக்குருக்கள் (மகன்)
குடும்பத்தினர்.

*யாழ்.வீதி,*
*(வங்கி அருகில்),*
*மானிப்பாய்.* (96345)

## அரசாங்க அறிவித்தல்

**அரசினர் பொது வைத்தியசாலை, யாழ்ப்பாணம்**

2002ஆம் ஆண்டுக்கான பொருள்கள், சேவைகள் வழங்குநர்களைப் பதிவுசெய்யும் திகதி 31-12-2001 வரை நீடிக்கப்பட்டுள்ளது. மேலதிக விவரங்களுக்கு 29-11-2001 'உதயன்' நாளிதழில் வெளிவந்த எமது விளம்பரத்தைப் பார்வையிடவும்.

**வைத்திய கலாநிதி (செல்வி) என்.கனகரத்தினம்,**
**பணிப்பாளர்,**
**அரசினர் பொது வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

(C/20019)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 25 | 02 |
| ☆ | ☆ |
| 12 | 01 |
| ☆ | ☆ |
| 1914 | 1998 |

### முத்து பொன்னம்பலம்

(இளைப்பாறிய அதிபர்; முன்னாள் தலைவர்,
வடமாகாண ஆசிரியர் சகாய நிதி சங்கம்)

திதி:29-12-2001

**ஆண்டுகள் மூன்று கடந்தாலும்**
**உங்கள் நினைவு எமை வாட்டும்!**
**கலங்கரை விளக்காய் நீங்கள் வாழ்ந்தும்**
**காவியமாய் எம் மனதில் வாழ்ந்திடுவீர்!**

உங்கள் ஆத்மா சாந்தியடைய எங்கள் குலதெய்வம்
காளியம்மனை வேண்டுகின்றோம்.

*உங்கள் பிரிவால் துயருறும்:*
அன்பு மனைவி,
அருமை மகன்,
பேரப்பிள்ளைகள்.

*'முத்துவாசா'*
*கெருடாவில்,*
*தொண்டமானாறு.* (96369)


நாளை எம் தேசத்தில் நல்ல தீர்வு வர

## ஈழத்துச் சிதம்பரத்தில் ஐந்து தேரோட்டம்



## ஈழத்து மக்களின் காவலனே தேரேறி வருக!

ஈழத்து சிதம்பரத்தில் ஐந்து தேரோடும்
இந்நாட்டு தமிழரின் இன்னல்கள் தீரும்
நாளைய புத்தாண்டு நமதாக மலரும்
நடேசர் ஐயப்பன் நல்லருள் சேரும்
ஏழை பங்காளன் எம்தலைவன் தேரேறி வருவான்
எம்மண்ணில் போர்நிறுத்தி நல்லாட்சி தருவான்
தோழனாய் வந்தெம் துயரங்கள் தீர்ப்பான்
தொல்லறம் வகுத்து தமிழரைக் காப்பான்.

வாருங்கள் எல்லோரும் வடம் பிடிப்போம்
வசந்தம் எம்தேசத்தில்வர இடம் பிடிப்போம்
சேருங்கள் எல்லோரும் சிவன்பக்கம் நில்லுங்கள்
செந்தமிழர் ஆட்சி இந்நிலத்தில் மலரும்
நேருங்கள் எல்லோரும் நிரந்தர தீர்வினை எண்ணி
நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற்றி தருவான்
ஈழத்து மக்களின் காவலன் சிவனே
இன்றெம் தேசத்தில் தேரேறி வருகிறான்.

- மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன் -

நாடு நலம்பெற நம்மினம் வளம்பெற, சமாதானம் மலர ஈழத்துச் சிதம்பரத்தில் இன்று (2001-12-29) தேரேறும் நடேசரை வேண்டி திருவாதிரை விழா சிறக்க வாழ்த்துவோர்:

**மலர் புடைவையகம்,**
இல.18 (67/A), பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

**ரூபா பன்முக வர்த்தகம்,**
இல.104A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
**ஸ்ரீ விக்கினேஸ்வரா,** சாவகச்சேரி.

(C/20010)

| | | | |
|---|---|---|---|
| | | சனி | வி. ரா. சந். |
| செவ். | இராசிச் சக்கரம் | | |
| புத. | | | |
| வெ. ▲ சூ. கேது | | | |

அரசியலில் பலவான் கை ஓங்கும். மாற்றங்கள், பேச்சு வார்த்தை, நோர்வே தலையீடு, இந்தியாவின் கரிசனை என்பன ஏற்படும். மதத் தலைவர்கள் சும்மா இருக்கமாட்டார்கள். அரசுக்கு பலவித அழுத்தங்களைக் கொடுப்பார்கள். இந்தியா, பாகிஸ்தான் பொருமல் மெல்ல மெல்ல யுத்தமாக வெடிக்கும் அபாயம் உண்டு. பயங்கர யுத்த மேகம் தலைதூக்கும். மேற்கு நாடுகள் மத்தய கிழக்கு, கிழக்கு நாடுகளில் அதிக பொருளைச் செலவு செய்யும். பஸுபிக், இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளில் இயற்கை அழிவுகளும் - யுத்த மேகங்களும் கருக்கூடக்கூடிய செயல்கள் நடக்கும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.

மாற்றம்:-

30.12.2001இல் திருவாதிரை நட்சத்திரம் மிதுனராசியில் சந்திரன் நிற்கும்.

# இந்த வார இராசி பலன்

## 30.12.2001 ~ 05.01.2002

### மேடம்

உடன் பிறந்தவர்கள் எல்லோரது வாழ்விலும் அருகில் இருப்பார்கள் என நம்பமுடியாது. தொழில் ஸ்தானத்தில் பதற்ற நிலை விட்டுவிட்டு ஏற்படும். பொருள் தவறல், சகோதரருடன் கலகம், போராட்ட சிந்தனை, புதியவர்களுடன் தொடர்பு, சட்டம் பேசல், வாக்கு வன்மை, தூரத்துச் செய்தி என்பன ஏற்படும். தலைச் சுற்று, நாரிநோ, வயிற்றுநோ என்பன வரும். பிரயாணத்துறை, ஹோட்டல் வேலை, அரசியல்வாதிகளுடன் தொடர்புகளால் லாபங்கள் வருதல் என்பன நடக்கும். அரசியல் பேசுவதனால் வீண் மனஸ்தாபங்கள் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், வியாழன், வெள்ளி.*

### இடபம்

உறவினர் உதவாமல் உபத்திரவம் தருபவர்களால் வேதனை பெருகுகின்றது என அடிக்கடிச் சிந்திப்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் விட்டு விட்டு புதிய திட்டங்களைச் செயற்படுத்த எண்ணுவீர்கள். காலதாமதம் ஏற்படல், ஆசையால் தவறுகள் நடத்தல், குளிர்ந்த பேச்சு, சகோதர உதவி, எதிர்பாலாருக்கு உதவுதல், அரச உதவி, நண்பர்கள் நன்மை செய்தல் என்பன நடக்கும். சலவருத்தம், நெஞ்சுப் படபடப்பு, தொண்டை நோ என்பன இருக்கும். சட்டத்துறை, குருத்துறை, பாதுகாப்புத்துறை, மருந்துத்துறை போன்ற துறையினர்கள் உதவிகள் செய்வார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: வியாழன், வெள்ளி*

### மிதுனம்

பொய்யை அதிககாலம் சொல்ல முடியாது. உண்மையை அதிக காலம் மறைக்கவும் முடியாது. தொழில் ஸ்தானத்தில் புதிய திட்டங்கள் தீட்டுதல், கீழ் ஊழியர்கள் உதவுதல், வருவாய் அதிகரித்தல், வீடு, வாகன வசதிகள் அதிகரித்தல், அரசியல்வாதிகளால் நன்மைகள் அதிகரித்தல் என்பன ஏற்படும். கை, கால் தாக்கம், முதுகு நோ, மலச் சிக்கல், களைப்பு என்பன வரும். இடமாற்றம் அல்லது தூர தேசத்துப் பிரயாணங்களைத் தவிர்க்க வேண்டும். குருத்துறை, போக்குவரத்துத் துறை, கொம்பியூட்டர்துறை, செய்தித்துறை போன்ற துறையினர்கள் உதவி செய்வார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: வியாழன், வெள்ளி*

### கடகம்

தொழில் ஸ்தானத்தில் கருத்துக் கலக்கம். குடும்பத்தினருக்காக ஓடியாடித் திரிதல், கற்பனை வளம், அடிக்கடி யோசனை வரல், தூரத்துச் செய்தி என்பன ஏற்படப் பலன் உண்டு. வயிற்று வருத்தம், பதற்றம், உணர்வுகள் மேலிடுதல், சல வருத்தம், மனப்பயம் என்பன ஏற்படும். சட்டத்துறை, அரசியல்துறை, பிரயாணத் துறை, ஹோட்டல்துறை போன்ற துறையினர்கள் லாபம் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: வியாழன், வெள்ளி*

### சிங்கம்

பிறந்த மண்ணுக்கு ஏதாவது செய்யவேண்டும் என்ற கருத்தில் வாழ்பவர்கள் மனம் சோர்வதனால் நாம் பல இழப்புக்களைச் சந்திக்காமல் இருக்க முடியாது. விருந்து,

## மகாதேவா ஜோதிடம்

இடமாற்றங்கள், பிறரின் உதவியால் பொருள்வரவு, அரசரால் ஆதாயம், ஆடை, ஆபரணங்கள் வாங்க யோசனை, திட்டமிடுதல், புதியவர்கள உதவி, வரவுகள் என்பன இருக்கும். நெஞ்சுவருத்தம், நாரிநோ, உஷ்ண படைகள், கண்வருத்தம், காலில் அடிபடல், கடும் உழைப்பு என்பன கொடுக்கும். சிலருக்கு திடீர் பிரயாண யோசனை ஏற்பட இடமுண்டு. விவசாயச் சிறப்பு, மருத்துவத்துறை, மின்சாரத்துறை, பாதுகாப்புத்துறை, குருத்துறை போன்ற துறையினருக்கு பல நன்மையான மாற்றங்கள் கொடுக்கும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: வியாழன், வெள்ளி.*

### கன்னி

பிறந்து, தவழ்ந்து, வாழ்ந்து பூமியில் - காதலித்த மண்ணில் - எமது உடல் புதைந்து போனாலும் - இங்கிருந்து பிற நாடுகளுக்கு வாய்ப்பு இருந்தும் போகமறுக்கும் மனங்களில் நாம் இடம்பிடித்துவிட முடியும் உண்மைதான் எல்லாம் எமது மனத்தின் தாக்கம்தான். தொழிலிடத்தில் போட்டிகள் இருக்கும். கால் உழைவு, சளி, இரத்த வருத்தங்கள், படபடப்பு என்பன கொடுக்கும் காலமாகும். எண்ணெய்த்துறை, செய்தித் துறை, குருத்துறை, விவசாயத்துறை போன்ற துறையினர்கள் அதிக லாபங்கள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், வியாழன், வெள்ளி.*

### துலாம்

குளிக்கத் தொடங்குபவர்கள் கூதலைத் தாங்கத்தான் வேண்டும். தொழில் ஸ்தானத்தில் பல துன்பச் சுமைகள் தொடரலாம். பொருள்வரவு, மறைமுக ஏமாற்றம், புத்திரரால் மகிழ்ச்சி, பெற்றோரின் உதவிகள், தூரத்துச் செய்திகள் என்பன நடக்கும். வயிற்று வருத்தம், தலைவலி, குடல் உபாதைகள், நரம்புவருத்தங்கள், மனப் போராட்டம் என்பன வரும். வாகனத்துறை, குருத்துறை, ஆராய்ச்சித்துறை, வியாபாரத்துறை, சட்டத் துறை போன்ற துறைகளைச் சார்ந்தவர்களுக்கு பலவித நன்மைகள் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, திங்கள், வியாழன், வெள்ளி.*

### விருச்சிகம்

பேராசை பெருந்தரித்திரம் ஆகும். அளவுடன் மனிதமனங்கள் போராடி வாழ்வதன் மதிப்பு அளவிடற்கரியதாகும். வீட்டில் அதிக வேலை, தொழில் ஸ்தானத்தில் அதிக போராட்டம், மனக்குமுறல்கள் ஏற்படல், உறவினர் அல்லது நண்பர்களின் கலகலப்பு என்பன இருக்கும். முதுகு உழைவு, வயிறு, நாரிநோ, கண்கூச்சம் என்பனவற்றுடன் சளித் தொல்லையும் கொடுக்கும். சட்டத் துறை, குருத்துறை, பாதுகாப்புத் துறை, மருந்துத்துறை போன்றதுறைகளைச் சேர்ந்தவர்களுக்கு பலவித மாற்றங்களும் நன்மைகளும் கொடுக்கும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: ஞாயிறு, திங்கள், வெள்ளி.*

### தனுசு

தர்மத்திற்கு மாறாக செயற்படும் பொழுது பாதி வழியில் பரிதவிக்கும் நிலையால் தடுமாறும் பலரைப் பார்த்திருப்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் உதவிகள் [illegible] களின் உத[illegible] இடுப்பு வலி, [illegible] குடல் வருத்தங்கள் [illegible] எதிர்ப்பாலார்கள் விடாப்பிடி[illegible]துச் செலவுகள் அதிகரித்தல் என்பன நடக்கும். நீதித்துறை, வியாபாரத் துறை, சந்தைத்துறை, ஆசிரியத் துறை போன்ற துறையினர்கள் அதிக லாபங்கள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, திங்கள், வெள்ளி.*

### மகரம்

ஏமாற்றி எடுத்த பணமும், பட்டமும் பாதிவழியில் பறிபோகும் பலன் ஏற்படாமல் இருக்காது. தொழில் ஸ்தானத்தில் பணவரவு அதிகரிக்கும். தூர தேசச் செய்திகள் வரும் பலன்கள் காணப்படுகின்றன. அயலவர்கள், நண்பர்கள் உதவிகள் செய்வார்கள். மூட்டுவலி, தலைவலி, மனக்குழப்பம், அஜீரணம், கைகால் வீக்கம் என்பன ஏற்பட இடமுண்டு. குருத்துறை, வாகனத்துறை, ரீ.வி, சங்கீதம், வீடியோ துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், வியாழன்.*

### கும்பம்

சீக்கிரமாய் கிடைக்கும் பொருளுக்கும் பலனுக்கும் அதிக மதிப்புக் கிடைக்காது. தொழில் ஸ்தானத்தில் இவ்வாறு யோசிக்கும் பலன்களுண்டு. அறிவாற்றல் சிறப்பு. பெரியோர்கள் உதவிகள். வீடு, வாகன சுகம் மேலிடல், மாமன் வழியினரின் உதவிகள் கிடைத்தல், அரசாங்க அதிகாரிகளின் உதவிகள் என்பன நடக்கும். தொண்டை நோ, கால் வீக்கம், மறதி, உஷ்ண பீடைகள் என்பன வரலாம். இசைத்துறை, கலைத்துறை, குருத் துறை, விவசாயத்துறை, பாதுகாப்புத் துறை போன்ற துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், வியாழன்.*

### மீனம்

சட்டத்திற்கு மாறாகச் சிலர் செயற்பட்டுத் தப்பிவிட்டாலும் தர்ம தேவதை கர்மத்தைக் கொடுத்து அவர்களைத் தண்டிக்காமல் விடமாட்டள். தொழில் ஸ்தானத்தில் நன்மை, தீமைகள் மாறி மாறி நடக்கும். பொருள் வரவு, கறுப்பு நிறப்பொருள் இழப்பு, பிடிவாதம், இனஜன உதவிகள் என்பன நடக்கும். இடுப்பு வலி, சளித்தொல்லை, இரத்த நோய்கள் என்பன வரும். பிரயாணத் துறை, மருந்துத்துறை, நகைத்துறையினர் கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், வியாழன்.*

# இலக்கிய நெடுஞ்சாலையில் ஒரு நிழல்தரு விருட்சம்

ஈழத்து இலக்கிய கர்த்தாக்களில் 'சோ.ப.' என்ற முதலெழுத்துக்களால் நன்கு அறியப்பட்ட சோ.பத்மநாதன் சற்று வித்தியாச மானவர். மரபிலே அழுத்தமாகக் கால்ஊன்றி, அதேநேரம் சமகாலப் பிரச்சினைகளைப் பல்வேறு கவிதை வடிவங்களில் சிந்தாமல், சிதறாமல் படைத்துத் தருவதில் சோ.ப.முக்கிய பங்கு வகிக்கிறார். பல தசாப்தங்களாக, ஆங்கில இலககியம் கற்பித்தல் என அவர் செய்யும் இலக்கிய வேள்வியில் பல மாணவர்கள் உருவாகியுள்ளார்கள். அவரின் நேரடிக் கண்காணிப்பில் உருவான மாணவர்

நூல்வரிசை

களில் ஒருவன் என்ற வகையில் அவர் அண்மையில் வெளியிட்டுள்ள 'ஆபிரிக்கக் கவிதை' பற்றிய சில அவதானிப்புக்களை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

சோ.பவின் மொழிபெயர்ப்புக் கவிதைகள் பற்றிக் குறிப்பிடுவதற்கு முன் முக்கியமாகச் சொல்லப்படவேண்டிய ஓர் அம்சம் இந் நூலுக்குக் கவிஞர் முருகையன் வழங்கியுள்ள முன்னுரை ஆகும். மொழிபெயர்ப்பு எனும் மொழிப் பிரயோக நிகழ்வில் பங்கு கொள்ளும் சகல அறிவியலாளர்களும் படித்தறியவேண்டிய இந்த முன்னுரை. ஆபிரிக்கக் கவிதைகளிற்கும் அவை அமைந்த, அமைய வேண்டிய தள நிலைமைகளுக்கும் மகுடம் வைத்தாற்போல் அமைந்துள்ளது. இம் முன்னுரையில் எனக்கு மிகவும் பிடித்த அம்சமாக, கவிஞர் முருகையனின் இலக்கியப் படைப்புக்கள் பற்றிய வரையறை விளங்குகின்றது.

"... கவிதை என்பதும் - ஏன் - இலக்கியம், கலை என்பவை எல்லாங் கூட, மனித மனங்களை உறுத்துகின்ற அல்லது உலுப்பி அசைக்கின்ற அலைவுகளின் அழகியல் வெளிப்பாடுகளே. அந்த வகையில் கவிஞர்களும், கலைஞர்களும் தம் வாழ் நிலைகளுடன் ஊன்றிச் செறிந்து ஊடாடிக் கொண்டிருப்பவர்கள். இந்த ஊடாட்டம் மக்கட் குழுமங்களின் பண்பாடுகளுடனும உயிர்ப்பு முறைகளுடனும் மிகவும் நெருக்கமான ஒன்றாகும். எந்த ஒரு தருணத்திலும் பண்பாட்டையும் கலைகளையும் வேறு பிரித்துப் பார்ப்பது மிகவும் சிரமமானது..."

கவிஞர் முருகையனின் நிலைப்பாடு, ஆபிரிக்கக் கவிதைகளைப் பொறுத்தவரை மிகவும் துல்லியமாகப் பரிணமிக்கின்றது.

**வ.பரந்தாமன்**
*விரிவுரையாளர்,*
*ஆங்கில மொழிப் போதனா நிலையம்,*
*யாழ். பல்கலைக்கழகம்.*

சோ.பவின் இலக்கியப் படைப்புக்கள் கவிதைப் பிரியர்களை மாத்திரம் சுண்டி இழுக்கவில்லை. அவரது பரந்த மொழிப் பிரயோகம் நிச்சயம் சமூக - மொழியியலாளர்களையம், சமூக - மானுடவியலாளர்களையும் தம்பக்கம் கவரும் என்பதில் ஐயமில்லை. மொழியின் பொதுமைப் போக்கை மிக இறுக்கப் பிடித்துள்ளார் சோ.ப.. கவிஞர் முருகையன் குறிப்பிட்டது போன்று சோ.ப. தாம் மொழிபெயர்க்கத் தெரிந்தெடுத்த கவிதைகளின் சமூக, பண்பாட்டுக் கலாசாரப் பிறப்பிடங்களும், தாம் அந்தக் கவிதைகளை மொழிபெயர்த்து, அவற்றின் கருப்பொருள்களை விதைத்திருக்கும் சமூகத்தின் பண்பாட்டு, கலாசார சுதந்திர விழிப்புணர்வுகளும ஏறத்தாள ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்திருப்பது 'ஆபிரிக்கக் கவிதை'க்குக் கிடைத்த மாபெரும் வெற்றி என்றே கூறவேண்டும். சோ.ப. இங்கு ஒரு சமூக விழிப்புணர்வை ஏற படுத்துவதில் முக்கிய பங்கு விகிக்

## சோ.பவின் ஆபிரிக்கக் கவிதை

கின்றார். உலகின் பல்வேறுபட்ட பிராந்தியங்களில் நொந்து, வாடி ஒரு மூலையில் முடங்கிக் கிடக்கும் மனிதக் கும்பல்களின் நாடித் துடிப்புக்களை ஒன்றிணைத்து ஒரே மேடையில், ஒரே பொது மொழியில் அவற்றை வெளி உலகிற்குத் தெட்டத் தெளிவாகப் படம் பிடித்துக்காட்டுகின்றார்.

இப் பொதுமைத் தன்மைக்கு உதாரணமாகச் சோ.பவின் முதலாவது கவிதையைக் குறிப்பிடலாம் என நினைக்கின்றேன். ஏனெனில் இதன் ஆங்கில மூலத்தை சோ.பவிடம் நேரடியாகப் பாடங்கேட்டுச் சுவைத்தவன் என்ற முறையில் அக்கவிதை பற்றிய சில எண்ணக் கோலங்களை வரையலாம் எனத் துணிகின்றேன்.

'ஆபிரிக்காவின் கோரிக்கை' என்ற தலைப்பிட்ட இக்கவிதை ஆபிரிக்காவின் கோரிக்கையை மாத்திரம் முன் வைக்கவில்லை. பல்வேறு வகைப்பட்ட அடக்குமுறைகளுக்குள் சிறைப்பட்டு நசுங்கித் துவண்டு கிடக்கும் சகல, உலக இன மக்களின் கோரிக்கையாகவே இக்கவிதையைக் கருதுகின்றேன்.

இக்கவிதையில் சமூக, பொருளாதார அரசியல் தாற்பரியங்கள் ஒன்றாகச் சங்கமிக்கின்றன. பணம் படைத்தவன், இல்லாதவனை நசுக்குதல், அரசியல் பலம் பொருந்தியவன், பலமில்லாதவனை ஒடுக்குதல், சமூக அடுக்கமைவுகளில் வர்க்க, வகுப்பு முரண்பாடுகளில் சிக்கி, உயர் வகுப்பில் உள்ளோர் கீழ் வகுப்பில் உள்ளோரை மிதித்து ஒதுக்குதல், ஆண்டான் - அடிமை, ஆண் - பெண், வெள்ளை - கறுப்பு இப்படி பல்வேறு வியாக்கியானங்களுக்கு இக்கவிதை இடந்தருகிறது. அதுமாத்திரமல்ல, மிகவும் நுண்ணிய மட்டத்தில் இக் கவிதையை நோக்கும் பொழுது ஒரு தனிமனிதன் தன்னுள் அடக்கி வைத்துள்ள வளர்ச்சிக் கோலங்களை வெளிப்படுத்த முடியாது திணறும் அவலநிலையும், அத்தனிமனிதனை வளரவிடாமல் முட்டுக்கட்டைபோடும் ஒரு நிலையும் காணப்படுகின்றது. இக் கவிதையானது நான், நீ என்ற இரு வகைப்பாடுகளை அடக்கி நிற்கின்றது. நான், நீ போன்றவற்றிற்கு கதாபாத்திரங்களை நிலை நிறுத்தி அழகு பார்ப்பது ஒவ்வொரு வாசகனையும் பொறுத்தது. நாம் இங்கு பெற்று வரும் அநுபவங்களே இக் கவிதையைச் சுவைப்பதற்கு கருவிப் பொருளாக விளங்குகின்றன.

*"நான் நீயல்ல*




*ஆனால்*
*நான் நானாக இருப்பதற்கு*
*நீ*
*ஒரு சந்தர்ப்பம் தருகிறாயில்லை*
*நீ*
*என் விஷயங்களில்*
*தலையிடுகிறாய்*
*ஏதோ அவை*
*உன் விஷயங்கள் போலவும்*
*நீ நான் போலவும்....*
*கடவுள் என்னை நானாகவும்*
*உன்னை நீயாகவும்*
*படைத்தார்.*
*கடவுள் பேரால் கேட்கிறேன்*
*என்னை*
*நானாக இருக்கவிடு!"*

நான் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும் இரண்டாவது கவிதை 'தொலைபேசி உரையாடல்' (Telephone Conversation). இக் கவிதை, கவிஞர் முருகையன் தனது முன்னுரையில் விவரிக்கும் சுரண்டல்களுள் ஒரு வகையைச் சார்ந்தது'

(10ஆம் பக்கம் பார்க்க)

விடுதலைப் புலிகள் மீதான

# தடைநீக்கத்துக்கு எதிராக ஜே.வி.பி. போராட்டம் நடத்தும்

கொழும்பு,டிசெ.29

விடுதலைப்புலிகள் மீதான தடையை அரசு நீக்கக்கூடாது என்று வலியுறுத்தி சர்வதேச ரீதியில் ஜே.வி.பி. போராட்டங்களை நடத்தவுள்ளது.

இதன் முதற்கட்டமாக ஜனவரி மாதம் தொடக்கம் அமெரிக்கா, பிரிட்டன், ஜேர்மனி மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் இந்தப் போராட்டங்கள் இடம்பெறவுள்ளதாக அறிவித்துள்ளது.

புலிகள் தமிழீழக் கோரிக்கையைக் கைவிட வேண்டும் என்று தெரிவித்த ஜே.வி.பி., தமது கோரிக்கைகள் சம்பந்தமாக உரியவர்களிடம் இருந்து நல்ல பதில் கிடைக்கும் வரை தமது போராட்டங்கள் தொடர்ந்து நடைபெறும என்று அறிவித்துள்ளது. (ம-10)

## ஆயுதங்கள் மீட்பு

தென்மராட்சி,டிசெ.29

மீசாலை மேற்கு கேணியடிப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை இளைஞர் சுட்டுக் கொல்லப்பட்ட இடத்திற்கு அருகில் பெருமளவு ஆயுதங்கள் கொடிகாமம் பொலீஸாரால் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது.

துப்பாக்கிகள், தோளில் வைத்து சுடக்கூடிய மோட்டார்கள், கைக்குண்டுகள் மற்றும் வெடிமருந்துகள் ஆகியவை மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ம-117)

## செஞ்சிலுவை கப்பல் சேவை

யாழ்ப்பாணம்,டிசெ.29

திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையேயான செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின நோயாளர் கப்பல் சேவை ஜனவரி மாதத்தில் ஐந்து தடவைகள் இடம் பெறவுள்ளது, திருகோணமலையில் இருந்து காங்கேசன்துறைக்கு 3ஆம், 9ஆம், 16ஆம், 23ஆம், 30ஆம் திகதிகளிலும் -

காங்கேசன்துறையில் இருந்து. திருகோணமலைக்கு 4ஆம், 10ஆம், 17ஆம், 24ஆம், 31ஆம் திகதிகளிலும் சேவை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ம-10)

## வயோதிபப் பெண் மீசாலையில் கைது!

யாழ்ப்பாணம்,டிசெ.29

மீசாலைப் பகுதியைச் சேர்ந்த வயோதிபப் பெண் ஒருவர் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று அவரின் உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மீசாலை வடக்கைச் சேர்ந்த கதிரவேலு பரமேஸ்வரி (வயது 65) என்பவரே கைது செய்யப்பட்டவராவார்.

நேற்றுமுன்தினம் வீட்டில் வைத்து இவர் கைது செய்யப்பட்டதாகவும் அந்த முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீசாலை மேற்கில் கடந்த 24ஆம் திகதி திங்கட்கிழமை படையினரால் கைது செய்யப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவரின் உறவினர் இவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-10-8)

## இலக்கிய...

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

"...ஏனென்றால், பொருளியல் அடிப்படையில் நிகழும் கொள்ளைகள், சுரண்டல்கள், உறிஞ்சல்கள், ஒடுக்கல்கள் எவ்வளவு தூரம் இழிந்தனவையோ அவ்வளவு தூரம் - ஏன் அதைவிட அதிகமாக இழிந்தவை - நிறத்தின் பேராலும், இனத்தின் பேராலும், மொழியின் பேராலும், சாதியின் பேராலும், கருத்துக்களின் பேராலும் மேற்கொள்ளப்படும் சுரண்டல்களும் - உறிஞ்சல் ஒடுக்கல்களும். நாகரிகம், முன்னேற்றம் சீர்திருத்தம் என்ற பெயர்ப்பலகைகளுக்குப் பின்னாலே நெளிந்து கொண்டிருக்கும் நச்சுப் புழுக்களே இவை எல்லாம்...."

மிகவும் வெட்ட வெளிச்சமாக கவிஞர் முருகையன் நவீன வர்க்க முரண்பாடுகளைப் படம் பிடித்துக்காட்டியுள்ளார். சோ.ப.மொழிபெயர்த்துள்ள சொயிங்காவின் இக்கவிதை நிறத்தின் பேரால் ஏற்படுத்தப்படும் வர்க்க முரண்பாடுகளையும், மனித மனப்பாங்குகளையும் இன, மொழி என்ற முரண்பாட்டுக் காரணிகளால் சிதைக்கப்பட்டுக்கொண்டிருக்கும் சிறுபான்மை இனத்துக்கு மிகவும் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

*குரல் வந்தது!*
*நான் அகப்பட்டுக் கொண்டேன்*
*"எவ்வளவு கறுப்பு?"*
*என் காதுகளை நம்ப முடியவில்லை.*
*"பொது நிறமா? கன்னங்கரேல் என்றா?"*

இங்கிலாந்தில் நிறப்பாகுபாடு நீறு பூத்த நெருப்பாக இருப்பதை "தொலைபேசி உரையாடல்" காட்டுகிறது.

ஆசிய, ஆபிரிக்க நாட்டவர் வாடகைக்கு வீடு தேடும்போது சந்திக்க நேரும் கசப்பான அனுபவம் இக்கவிதைக்கு அடிப்படை.

மிகவும் பரந்த நோக்கில் இம்மொழி பெயர்ப்பு முயற்சியை ஆராய்கையில், சோ.ப. நடத்தியிருப்பது ஒரு மொழி மூலமான பதியமுறை இன வளர்ச்சி என்றே கூறவேண்டும். நாம் எவ்வாறு ஒரு நல்லின விதையை அல்லது நாற்றை அல்லது ஒட்டு அரும்பை வேறு ஒரு மரத்தில் ஒட்டி நல்ல செழிப்பான மரத்தை உருவாக்குகிறோமோ அதுபோல, சோ.ப. தனியே மொழியை மாத்திரம் பெயர்த்தெடுக்காமல் அவர் இனங்கண்ட - சுதந்திர விழிப்புணர்வு கொண்ட - சமூகத்தின தேடல்களை, உணர்வுபூர்வமான எழுச்சியை, விடுதலை மற்றும் கலாசாரக் கூறுகளை மீட்கவும், தனது சுயநிர்ணயத் தன்மைக்கான அங்கீகாரத்தை வேண்டி நிற்கின்றதுமான எமது சமூகத்திற்கு ஒரு கலாசாரக் கலவையாகத் தந்திருக்கும் பாங்கு பாராட்டுக்குரியது. ★


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஐ.எவ்.எஸ். மையத்தில் (Institute of Fundamental Studies) ஆராய்ச்சி மேற்கொண்டுவரும் யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவரும், யாழ்.பல்கலைக்கழக விலங்கியற்றுறை விரிவுரையாளருமான

**திரு.எஸ்.நோபிள் சுரேந்திரன்**

அவர்கள் சிறப்புமிக்க ஆராய்ச்சியாளராகத் திகழ்ந்து விஞ்ஞான ஆராய்ச்சிக்கான "ஜனாதிபதி விருது - 2000" பெற்றமையையிட்டு அவரை மனதாரப் பாராட்டுகின்றேன்.

அவர் தனது B.Sc. பட்டப்படிப்புக்கு எனது விசேட பகுதியில் (முள்ளந்தண்டற்ற விலங்குகள் சேர்ந்த சிலவற்றில்) யாழ்.பல்கலைக்கழக விலங்கியற்றுறையில் கற்கும் பொழுது ஆராய்ச்சி ஆரம்பித்து, சித்தி அடைந்தமை பற்றி மிகப் பெருமைப்படுகிறேன்.

அவர் மேலும் சிறப்புற ஆராய்ச்சிகள் செய்து தனக்கு மட்டுமல்லாது, தனது ஊருக்கும் நாட்டுக்கும் புகழ்சேர்த்துக் கொடுக்கவேண்டுமெனப் பாராட்டி வாழ்த்துகின்றேன். ஓய்வுபெற்ற யாழ்.பல்கலைக்கழக விலங்கியற்றுறைத் தலைவரும் பேராசிரியருமான - நவமணி செல்வராஜா.

(9637)



# தகவல் தரவும்



இப் படத்திலுள்ள

**பெ.சத்தியதாஸ்**

என்பவரை 15-11-2001 தொடக்கம் காணவில்லை. இவர் ஒரு மனநோயாளி. உயரம் 5 அடி, வயது 39, பொதுநிறம், தாடியுள்ளவர். இவரை மிகுந்த மனவேதனையுடன் தேடிக் கொண்டிருக்கின்றோம். தகவல் தருவோருக்கு சன்மானம் வழங்கப்படும்.

*தொடர்பு:*
**ப.நகுலேஸ்வரன்**
ஈவினை தெற்கு, சுன்னாகம்.
**T.P. 070 -213081**

(96374)





மாமனிதர் குமார் பொன்னம்பலம்

# ஞாபகார்த்தக் குழுவின் அறிவித்தல்

தியாக மாமனிதரின் 2ஆவது நினைவஞ்சலி நிகழ்வுகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நாளை (30.12.2001) ஞாயிற்றுக்கிழமை பி.ப.2.00 மணிக்கு எமது அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

அங்கத்தவர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் கலந்துகொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

*"காங்கிரஸ் இல்லம்"*
*126, 3ஆம் குறுக்குத்தெரு,*
*யாழ்ப்பாணம்.* (96388)

- ஞாபகார்த்தக் குழு.



# நன்றி உணர்வுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

2000ஆம் ஆண்டு எமது சங்கத்துடன் இணைந்து தொழிற்பட்ட காலத்தில் இடம்பெயர்வு காரணமாக தொழில் பாதிப்புக்குள்ளான அங்கத்தவர்களுக்கும், பணியாளர்களுக்கும் நிதி உதவியாக 1017000 ரூபாவை ஒதுக்கி அதில் 912000 ரூபாவை வழங்கியும் நிதியினைப் பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு நிதி வழங்குவதாக உறுதியளித்தமைக்காகவும்,



ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும்,
முன்னாள் அமைச்சருமான உயர்திரு.
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும் -



தென்மராட்சி ஈ.பி.டி.பி. அமைப்பாளர்,
உயர்திரு.
**சூ.அலெக்சாண்டர் (சாள்ஸ்)**
அவர்களையும் -

*நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

*பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கொடிகாமம்.* (C/20036)

பணிப்பாளர்கள், பணியாளர்கள், அங்கத்தவர்கள்.



# கண்ணீர் அஞ்சலி

மானிப்பாய், பட்டின சபை ஒழுங்கையை வதிவிடமாகக் கொண்ட எமது அன்புக்குரியவரான

**தம்பையா நவரட்ணம் (சந்திரன்)**

அவர்கள் 25.12.2001 அன்று இயற்கையெய்தியதை அறிந்து மிகவும் துயருறுகின்றோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஸ்ரீ சாயி தொலைத் தொடர்பு நிலையம், மானிப்பாய்.

(20035)



# வேலைக்கு ஆள் தேவை

எமது நிறுவனத்துக்கு காசாளர், பில் கிளார்க் மற்றும் வேலையாள் தேவை.
அனுபவமுள்ளவர்கள் சிபார்சுக் கடிதம் மற்றும் சான்றிதழ்களுடன் உடன் நேரில் வரவும்.

ஹோட்டல் றொலெக்ஸ்
(குகன் விருந்தகம்)
340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (96386)



உ
கணபதி துணை

உசன், மிருசுவில் கஜகேணிப்பிள்ளையார் கோயில்

# வருடாந்த கணபதி ஹோமம்

அடியார்களே!

நிகழும் விஷு வருஷம் மார்கழி மாதம் 16ஆம் நாள்(31-12-2001) திங்கட்கிழமை காலை 8 மணிக்கு நாட்டின் நலன்கருதியும், யுத்தம் நீங்கி சமாதானம் வேண்டியும் வருடந்தோறும் நடைபெறும் கணபதி ஹோமம் இம்முறையும் நடைபெற இறையருள் கைகூடியுள்ளது. ஆகவே இவ்வைபவத்தில் அனைத்து அடியார்களும் பங்குபற்றி சாந்தி, சமாதானம் நிலவப் பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

- சிவஸ்ரீ இ.கேதீஸ்வரக் குருக்கள்.

*சிறப்பு அனுசரணை:*
சுவேதிகா தொலைத் தொடர்பு சேவை
துரைமோட்டோர்ஸ்.
*பருத்தித்துறை வீதி, கொடிகாமம்.*

தொலைபேசி எண்:
070 - 212927,
070 - 213162. (96382)



# ஐந்தாவது ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**வேலுப்பிள்ளை நடராசா**
*(இளைப்பாறிய கல்விப் பணிப்பாளர்)*

தோற்றம்: 10-11-1916 மறைவு: 23-12-1996

திதி: 29-12-2001

ஆண்டுகள் ஐந்து ஆனாலும் நம் துயரம் ஆறிடுமோ?
அன்புப் பிணைப்பு அறுந்து அனாதரவாய் ஆகிடுமோ?
அமரத்துவம் அன்னாரை அந்நியன் ஆக்கிடுமோ?
நின் தூய்மைக்கும் வழிகாட்டலுக்கும் ஆகாது ஆகிடுமோ?
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*துன்னாலை கிழக்கு, கரவெட்டி.* (96379)

*உங்கள் பிரிவால் துயருறும்:* குடும்பத்தினர்.

## உளம் கனிந்த வாழ்த்துக்கள்

யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாக
பதவிப்பிரமாணம் செய்துகொண்ட
புத்தூர் கிழக்கைச் சேர்ந்த

### திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை

*(முன்னாள் உதவி அஞ்சல் அத்தியட்சகர்)*

அவர்களை உளப்பூர்வமாகப் பாராட்டி வாழ்த்துவதுடன், அவர் நீண்ட ஆயுளுடன் வாழ இறை ஆசியையும் வேண்டி நிற்கின்றேன்.

*ஸ்ரீ காளிகா சிற்பாலயம்,*
*புத்தூர், திருநெல்வேலி.*

விஸ்வப் பிரம்மஸ்ரீ
ஸ்தபதி செ.பாலச்சந்திரன்
ஆசாரியார்.

(C/20044)

## ST. JOHN'S PARISH NURSERY SCHOOL

CHUNDIKULI.

☆ 3+, 4+ பிள்ளைகளுக்கான இடங்களுண்டு.

☆ விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்திசெய்து திரும்ப ஒப்படைக்கும் காலம்: Dec.29 - Jan. 3 வரை.

☆ பாலர் பாடசாலை ஆரம்பமாகும் திகதி: ஜனவரி 7 திங்கட்கிழமை காலை 9 மணி.

*முகாமையாளர்,*
*பரியோவான் ஆலய பாலர் பாடசாலை,*
*சுண்டிக்குளி.*

Tel:2270

## இதய அஞ்சலிகள்

## தமிழ்த் தேசம் கண்ணீர் வடிக்கிறது



### மாமனிதர் கலைஞானி அ.செல்வரத்தினம்

*ஈழ மண்ணின் உயர் விருதைப் பெற்றெடுத்த*
*தமிழ் மறவன் தரணியிலே சாய்ந்துவிட்டான்.*
*மண்ணுக்காய் வாழ்ந்த வள்ளலின் மறைவு*
*கண்டு மனம் இங்கு துடிக்கிறது*
*மாமனிதரின் இழப்பினால் தமிழர் வரலாற்றுப்*
*பொக்கிஷங்கள் உதிரம் சொட்டுகின்றன.*
*சரித்திரங்கள் உறங்கினாலும் உம் தொண்டு*
*நிச்சயம் இம்மண்ணில் தொடரப்படும்.*
*வாழ்வை அர்ப்பணித்தீர்; மாமனிதரானீர்!*
*தமிழ் மண் ஒருபோதும் உங்களை மறக்காது.*
*என்றும் உம்பணி தொடர்வோம்.*
*எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.*
***"உயிரைக் கொடுத்தும் தமிழைக் காப்போம்!"***

*பரமேஸ்வராச் சந்தி,*
*திருநெல்வேலி,*
*யாழ்ப்பாணம்.* ([illegible])

எம்.சாந்தன் சத்தியகீர்த்தி,
இயக்குநர்,
மாமனிதர் கலைஞானி அருங்காட்சியகம்.

## யாழ்ப்பாண மாநகரசபை
## பொன்விழா ஆண்டுக் கொண்டாட்டங்கள்
## 1949-1999 (2002)

எதிர்வரும் 2002ஆம் ஆண்டு ஜனவரி மாத பிற்பகுதியில் இடம்பெறவுள்ள யாழ்ப்பாண மாநகரசபையின் பொன்விழா ஆண்டுக் கொண்டாட்டத்தினை முன்னிட்டு மாவட்ட மட்டத்தில் பின்வரும் போட்டிகளை நடத்துவதெனவும், பொன்விழா மலர் ஒன்றினை வெளியிடுவதெனவும் பொன்விழா ஏற்பாட்டுக்குழு ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

01. சைக்கிள் ஓட்டப் போட்டி
02. மரதன் ஓட்டப் போட்டி

பொன்விழா மலரில் யாழ்.மாநகரசபை தொடர்பான வரலாற்று ஆவணங்கள், தரமான ஆக்கங்கள் மற்றும் புகைப்படங்களைப் பிரசுரிப்பதற்கு வசதியாக அவற்றை வழங்கவிரும்புவோர் எதிர்வரும் 08-01-2002ஆம் திகதிக்கு முன்னர் பொன்விழா ஏற்பாட்டு அலுவலகத்தில் நேரடியாகவோ அன்றேல் தபாலில் அனுப்பியோ உதவுமாறு பொதுமக்கள் அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

க.கிங்ஸ்லி கணேசன்,
அமைப்பாளர்,
பொன்விழா ஏற்பாட்டுக்குழு,
யாழ்.மாநகரசபை.

(C/20040)

## சிறுவனின் செய்கையால் வந்தது வினை!

யாழ்ப்பாணம்,டிசெ.29

கையில் வைத்துச் சுழற்றிய 'வயர்'த் துண்டின் நுனி கண்ணில் கீறியதால் 3 வயதுச் சிறுவன் ஒரு கண்ணின் பார்வையை இழக்கவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

அச்சுவேலி, உலவிக்குளம் பகுதியில் இருதினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த வேலாயுதம் வக்ஷன் என்ற சிறுவனே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளான். சிறுவன் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளான். (க-15)

## மட்டுவில், சரசாலை மாணவர்களுக்கு உபகரணங்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.29

மட்டுவில் வடக்கு - சந்திரமௌலீச வித்தியாலயம், சரசாலை ஸ்ரீகணேச வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கல்விகற்கும் சகல மாணவர்களுக்கும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மாலுசந்திக்கு அருகில் இயங்கும் தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு முன்னால் உள்ள வீடொன்றில் வைத்து பாடசாலை உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன என்றும் -

சம்பந்தப்பட்ட மாணவர்களின் பெற்றோர்கள் தவறாது வருகைதந்து அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் - பாடசாலை அதிபர்கள் கேட்டுள்ளனர். (க-7)

## இந்துப் பேரவையின் கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.29

வடபிரதேச இந்துப்பேரவையின் செயற்குழுக் கூட்டம் நாளை ஞாயிறு காலை 9 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் முன்வீதியில் உள்ள அறுபத்துமூவர் குருபூசை மடத்தில் நடைபெறவுள்ளது.

பேரவைத் தலைவர் சுநித்தியானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்துக்கு செயற்குழு உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு பேரவைச் செயலர் எஸ்.என்.இராமச்சந்திரா கேட்டுள்ளார். (க-7)

## திரைப்படக்காட்சி

யாழ்ப்பாணம்,டிசெ.29

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கிவரும் திரைப்படக்காட்சித் தொடரில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு "SHATRANJ-KE-KHILARI" என்ற வங்க மொழித்திரைப்படம் திரையிடப்படவுள்ளது.

பிரபல வங்கமொழி இயக்குநரான சத்திய ஜித்ரே இயக்கிய 'PREM CHAND' மூலக்கதையை அடிப்படையாகக் கொண்ட ஆங்கில உபதலைப்புகளுடன் கூடிய இந்தப் படம், புலியற்றுறை மண்டபத்தில் திரையிடப்படவுள்ளது.

ஆர்வலர்கள் எவரும் கலந்துகொண்டு பயன் பெறலாம் என்று புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் அறிவித்துள்ளார். (க-6)

நிறைஞ்சனாஸ்
சங்கானை
அமரர் சிவாஜி கணேசனின்
ஞாபகார்த்தமாகத் திரையிடப்பட்டுள்ளது.
சிவாஜி, விஜய், சிம்ரன் நடித்த
ஒன்ஸ்மோர்
(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.30, 2.30, 5.30 (பி.நே.)
(C-19779)

ராஜா யாழ்ப்பாணம்
இன்று மட்டும்
விஜய், ரம்பா, தேவயானி
மற்றும் பலர் நடித்த
நினைத்தேன் வந்தாய்
(ரீல்ஸ்)
தினசரி:- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு 10.30, 2.00, 5.00
[illegible] முதல்
ஷாம், சிம்ரன், ஜோதிகா, விவேக் நடித்த
12 B
(C-19778)

நாகம்ஸ் சுன்னாகம்
கமல் (இரட்டை வேடம்),
மனீஷா, ரவீனா
மற்றும் பலர் நடிக்க
ஆளவந்தான்
காட்சிகள் 11.00, 2.00 (புதிய நேரம்)

# மரண அறிவித்தல்கள்

## மாமனிதர் கலைஞானி அ.செல்வரத்தினம்

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட கலைஞானி அ.செல்வரத்தினம் நேற்று (28.12.2001) வெள்ளிக்கிழமை அமரத்துவம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரியகுட்டி - தங்கமுத்து தம்பதிகளின் ஏகபுத்திரனும், காலஞ்சென்ற திருமதி பரமேஸ்வரி இராசேந்திரம் மற்றும் திருமதி நாகேஸ்வரி நடராஜா ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (28.12.2001) நல்லூர் மருதடி வீதியிலுள்ள 68 ஆம் இலக்க இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*68,மருதடி வீதி,*
*யாழ்ப்பாணம்,*

தகவல்:
அ.சக்திவேல்
(மருமகன்)

(96392)

## முத்துத்தம்பி தங்கராஜா

*(ஓய்வுபெற்ற ஆசிரியர் நு/மறையா தமிழ் வித்தியாலயம், யா/இருபாலை சி.சி.பாடசாலை)*

உடுவிலைப் பிறப்பிடமாகவும் பழைய வீதி வீரபத்திரர் கோயிலடி கோப்பாய் தெற்கு கோப்பாயை வாழ்விடமாகவும், தற்போது இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துத்தம்பி தங்கராஜா நேற்று (28.12.2001) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி - செல்லாச்சி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பியையா - இராசம்மா ஆகியோரின் மருமகனும்

திருமதி சந்திராதேவியின் (ஓய்வு பெற்ற ஆசிரியை யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலை) அன்புக் கணவரும், திருமதி தயாளினி - ஜெயந்தன் (ஆசிரியை N/GLENEAGLES.T.M.S), திருமதி சாளினி -ரகுபதி (சுவிஸ்), த.மகேந்திரராஜா (சுவிஸ்) திருமதி பிரபாலினி - பாலஸங்கர் (SRILANKA TELECOM) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரி. ஜெயந்தன் (அதிபர்,N/GLENEAGLES.T.M.S), எஸ்.ரகுபதி (சுவிஸ்) திருமதி ம.வளர்மதி (சுவிஸ்) பி.கே.பி.பாலஸங்கர் (பிரதேச செயலகம் - வேலணை) ஆகியோரின் அன்பு மாமனும், ஜெ.ஹர்சிகா, ஜெ.துசாரன், ஜெ.நிதுஷன், ர.அபிராமி, ர.அஞ்சலா, பா.பாலரிஷாந், பா.பாலசிவானுஜன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை, தர்மலிங்கம் மற்றும் அரியமலர், இராசலிங்கம் ஆகியோரின் அன்புச் சோதரரும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் இரட்ணசபாபதி, தையல்நாயகி, செல்வராஜா, குணநாயகம், இராஜேஸ்வரி, சிவலோகநாதன் (ஓய்வுபெற்ற உதவிப்பணிப்பாளர் - விவசாயத்திணைக்களம்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*பரராஜசேகரப் பிள்ளையார் கோயிலடி,*
*இணுவில் மேற்கு,*
*இணுவில்.*

தகவல்
திருமதி
த.சந்திராதேவி
(மனைவி)

(C/20043)

## திருமதி வையித்தியாம்பிள்ளை மாணிக்கம்

கோப்பாய் தெற்கு, புதிய செம்மணி வீதி, ஞானவைரவர் கோயிலடியைப் பிறப்பிடமாகக்கொண்ட திருமதி வையித்தியாம்பிள்ளை மாணிக்கம் நேற்று (28.12.2001) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ம. வையித்தியாம்பிள்ளையின் அன்பு மனைவியும் மகாலிங்கம், சண்முகலிங்கம், குணசேகரம், மல்லிகாதேவி, பேபி, தங்கராசா ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற லட்சுமி மற்றும் சின்னம்மா, செல்லம்மா, அன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற இராசையா மற்றும் செல்லம்மா, சிவக்கொழுந்து, மகேஸ்வரி, பவளம், சாரதா ஆகியோரின் பாசமிகு மாமியாருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2001) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புதிய செம்மணி வீதி,*
*ஞானவைரவர் கோயிலடி,*
*கோப்பாய் தெற்கு.*

தகவல்:
வை.மகாலிங்கம்
(மகன்)

(96389)

## திருமதி நாகேஸ்வரி இரகுராசகுமாரன்

கெருடாவிலைச் சேர்ந்த சீவரத்தினம் தம்பதிகளின் அருமைப் புதல்வி நாகேஸ்வரி (27.12.2001) வியாழக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் நீர்வேலியைச் சேர்ந்த காலஞ்சென்ற இரகுராசகுமாரனின் அன்பு மனைவியும் நிர்மலா (பிரான்ஸ்), வத்சலா (லண்டன்), ராதிகா (ஆசிரியை, யாழ்.கனகரத்தினம் ம.வி.) ஆகியோரின் அன்புத் தாயாரும் யசோதரன் (பிரான்ஸ்), பிரணவருபன் (லண்டன்), Dr.சுதாகரன் (யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் நிரோஸ், நிவேதா, பிரவீனா, நவீனா, சாரங்கன் ஆகியோரின் பேர்த்தியாரும், பரமேஸ்வரி, இராஜேஸ்வரி, காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் சண்முகராசா, விக்கினராசா ஆகியோரின் சகோதரியும் ஆவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**91.Munster Avenue,**
**Hounslow**
**middle sex**
**Tw4.5BL, U.K.**
**T.P.No-0044-208 5709751**

தகவல்:
Dr.சுதாகரன்
(மருமகன்)

(96380)

## தம்பிப்பிள்ளை முருகேசபிள்ளை

கொய்யாத்தோட்டத்தைச் சேர்ந்த வேலாயுதம் என்று அன்பாக அழைக்கப்படும் முருகேசபிள்ளை 27.12.2001 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - செல்லம் தம்பதியினரின் அன்பு மகனும் சந்திரவதனாவின் அன்புக் கணவரும், குணசேகரம்பிள்ளை, பரிமளம், தில்லையம்மா, லெட்சுமி மற்றும் காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை, சிதம்பரப்பிள்ளை, முத்துப்பிள்ளை, சிவஞானம், ஞானி ஆகியோரின் அன்புச் சகோதரரும், முருகதாஸ் (யாழ். போதனா வைத்தியசாலை), சரிதாஸ் (கொழும்பு), குகதாஸ் (பிரான்ஸ்), ராதிகா (இத்தாலி), கண்ணதாஸ் (இத்தாலி), பாரதி ஆகியோரின் பாசமிகு தந்தையும்; கிருஷ்ணகுமாரி (யாழ்.போதனா வைத்தியசாலை), புஸ்பலதா (கொழும்பு), புஸ்பராணி, ஆனந்தராஜா (இத்தாலி), யோன்சன் ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரதீஸ், சதுர்யா, திவ்யா, மயூரிக்கா, ரம்மியா, கஜயன், மயூரன், பானுயன், சகானா ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (29.12.2001) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக புதியநேரம் 10.00 மணிக்கு கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*7/1, புது வீதி*
*பரன்குளம் லேன்,*
*கொய்யாத்தோட்டம்,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
மு.சந்திரவதனா
(மனைவி)

(96391)

### மாமனிதர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கௌரவிக்கப்பட்டிருந்தார்.

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட கலைஞானி, தான் சேகரித்த அரும்பொருள்களை திருநெல்வேலி பரமேஸ்வராச்சந்தியில் உள்ள வீடொன்றில் ஆவணப்படுத்தி வைத்திருந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நல்லூர் மருதடி வீதியில் உள்ள அவரது உறவினர் இல்லத்தில் நேற்று மாலை நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. (க-7-6-9)

### ஏற்பாட்டாளராக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நோர்வேயில் 'நோர்வே போஸ்ற்' என்ற பத்திரிகைக்கு அவர் வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

"ஆக்கபூர்வமான வகையில் சமாதான நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதே தமது அரசாங்கத்தின் நோக்கமாகும்." என்றும் அவர் குறிப்பிட்டார்.

"எதிர்வரும் மார்ச் மாதமளவில் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்குரிய சூழ்நிலை காணப்படுகிறது. இதற்கு விடுதலைப் புலிகளிடமிருந்து ஆக்கபூர்வமான பதில் எதிர்பார்க்கப்படுகிறது." என்றும் அவர் குறிப்பிட்டார்.

பேச்சுகளை மீண்டும ஆரம்பிப்பதற்கு சம்பந்தப்பட்ட சகல தரப்பினிடமும் அரசியல் திடசங்கற்பமும் அர்ப்பணிப்பும் இருக்கவேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மைச் சந்திப்பதற்கென இலங்கை அமைச்சர் ஒருவர் நோர்வேக்கு வருகை தந்துள்ளார் எனவும் அவர் தெரிவித்தார்.(உ-4-7-ரி)

### ராணுவ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவரது சேவை மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிக்கும் உத்தரவு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மேஜர் ஜெனரல் நீல் டயஸ் ஓய்வு பெற்றுச் சென்றால், தற்போது இராணுவத்தின் பிரதிப் பிரதம அதிகாரி பதவியில் இருக்கும் மேஜர் ஜெனரல் லொகான் குணவர்த்தனா பிரதம அதிகாரி பதவிக்கு உயர்த்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஓய்வுபெற்றுச் செல்லும் நீல் டயஸ், பிரதம அதிகாரி பதவிக்கு மேலதிகமாக வடக்குக்கான முழுப் படை நடவடிக்கைகளுக்கும் பொறுப்பான அதிகாரியாகவும் (ஓ.ஓ.ஸி) பணியாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

### புலிகளுடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜே.வி.பி. அரசியல் குழு விடுத்த அறிக்கைக்குப் பதிலாகவே கப்புகொட்டுவ அறிக்கை விடுத்துள்ளார்.

பேச்சு மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுவதை மக்கள் டிசெம்பர் 5 தேர்தலில் அங்கீகரித்தனர். அதனையே நாம் நிறைவேற்றுகிறோம். கண்களைக் கட்டிக்கொண்டு குருடர்களைப் போன்று நாம் புலிகளுடன் பேச்சுக்குச் செல்லவில்லை.

பிரபாகரன் பின்பக்கம் திரும்புவாரேயானால் நாமும் பின்பக்கம் திரும்பக் கூடிய எல்லாப் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் மேற்கொள்கிறோம்.

வரலாற்றில் இருந்து நாம் பாடம் கற்றிருக்கிறோம். ஒரே தவறை இரண்டாவது தடவையும் செய்ய நினைக்கவில்லை.

- இவ்வாறு அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

### மக்களை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குருபரன் ஆகியோர் இந்தச் சந்திப்பில் பங்குபற்றினர்.

குழுவின் கோரிக்கைகளுக்கு பதில் அளித்து அமைச்சர் தெரிவித்த கருத்து வருமாறு:-

★ வடக்கு - கிழக்கு புனர்வாழ்வு அதிகாரசபையின் நிதி நிலைமை மோசமாகவுள்ளது. வங்கிக் கணக்கு மேலதிகப்பற்றில் இருக்கின்றது. அந்தச் சபைக்கான அடிப்படை வசதிகள் படுமோசம். அங்கு 'பக்ஸ்'கூட இல்லை.

அத்துடன் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் அலுவலகம் இன்னமும் ஜனாதிபதியின் பொறுப்பிலேயே உள்ளது.

இந்தக் காரணங்களால் மக்களை மீளக்குடியமர்த்தத் தேவையான நிதி பெறமுடியாதுள்ளது. மேலதிக நிதி, அமைச்சுக்குக் கிடைத்ததும் மீளக் குடியமர்வு மேற்கொள்ளமுடியும்.

★பாடசாலைகளில் நிலைகொண்டுள்ள படையினரை விலக்கப் பாதுகாப்பு அமைச்சுடன் கலந்துரையாடல் நடத்தப்படும்.

★ விமானப் பயணிகளுக்கான பாதுகாப்பு அனுமதியை நீக்குவது தொடர்பாகவும் பாதுகாப்பு அமைச்சுடன் கலந்துரையாடவிருககிறோம்.

### கிழக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ளார்.

"தற்போது விடுதலைப் புலிகள யுத்தநிறுத்தத்தை அறிவித்துள்ளனர். அரசு மோதல் தவிர்ப்பை அறிவித்துள்ளது.

"அரசதரப்பு யுத்தநிறுத்தத்தை அறிவிக்காத நிலையில் விடுதலைப் புலிகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு வந்துசெல்வது சமாதான முயற்சிகளுக்கு இடையூறாக அமையலாம்.

"மோதல் தவிர்ப்புக் காலகட்டத்தில் யுத்தத்துடன் தொடர்புடைய இரு தரப்பும் தங்களுடைய கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இருக்கவேண்டும்.

"நிராயுதபாணிகளாக வரும் விடுதலைப் புலிகள் அப்படி வரவேண்டிய தேவை இருக்குமானால் முன்கூட்டியே அறிவிப்பது மிகவும் பொருத்தமானது" - என்று பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்தம் மற்றும் அரச தரப்பின் மோதல் தவிர்ப்பு கடந்த திங்கட்கிழமை நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வந்ததையடுத்து கடந்த செவ்வாய், புதன், வியாழன் ஆகிய நாள்களில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் காணப்பட்ட விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தை நேற்றுக் காண முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (க-3)


## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
## பழைய மாணவர் சங்கம்
## முழு நிலாநாள் கருத்தரங்கு

காலம் :- நாளை (30-12-2001) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணி (புதிய நேரம்)

இடம் :- யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபம்

தலைமை :- பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை (துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)

கருத்துரை :- "ஈழத்து மண்ணில் தமிழ் ஊடகங்கள்"

வழங்குபவர் :- இளையதம்பி தயானந்தா பி.ஏ. (சிறப்பு) (ஊடகவியலாளர், இலங்கை வானொலி)

**அனைவரும் வருக!**

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி. பழைய மாணவர் சங்கம்.

ஆதரவு:- சுடர் ஒளி


## மரண அறிவித்தல்

### வீரபாகு பொன்னுத்துரை

புளியங்கூடலைச் சேர்ந்த வீரபாகு பொன்னுத்துரை நேற்றுக் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும் இராசம்மா, செல்லம்மா, சிவக்கொழுந்து ஆகியோரின் அன்புச் சகோதரரும் [illegible]மணி, காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் பரமேஸ்வரி, வரதராசா (சண்டிலிப்பாய்) ஆகியோரின் அன்புத் தகப்பனும் பாலசுப்பிரமணியம், இராசேந்திரம் (என்.ரி.ஆர். ரான்ஸ்போட்), இராஜரட்ணம், மல்லிகாதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை (தெனியாய வர்த்தகர்), முத்துவேலு, கணபதிப்பிள்ளை, சிவக்கொழுந்து மற்றும் வைத்திலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சாந்தினிதேவி, பிரபாவதி, மனோரஞ்சினி (பிரதேச செயலகம் - வேலணை), ஜெயகுமார், உதயகுமார், சசிகுமார், சுதர்சினி, விஜிதா, சுசிதா, இராஜகன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2001) சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுருவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புளியங்கூடல்.

தகவல்:
பா.இராசேந்திரம்
(என்.ரி.ஆர்.ரான்ஸ்போட்)
(மருமகன்)

(C/20047)


## பிறிமா மா விலை மாற்றம்

பிறிமா சிலோன் லிமிட்டெட் ஸ்தாபனத்தார், மாவின் விலை 3/= ரூபாவால் அதிகரித்துள்ளமையால் எமது ஸ்தாபனம் இன்று முதல் மாவின் விலையை கீழ்க்காணும் விலைப்படி விற்பனை செய்யவுள்ளது என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

| | | | |
|---|---|---|---|
| பிறிமா - மா - | மொத்தவிலை | ரூ.22/15 |
| | சில்லறை விலை | ரூ. 22/50 (50kg) |
| சொரி - மா - | விலை | ரூ.22/75 kg |
| மில் - மா - | மொத்தவிலை | ரூ.22/65 |
| | சில்லறை விலை | ரூ. 23/= |

வி.எஸ்.பி. குறூப்

(C/20038)

275, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி - 2653

99-105, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி - 2150

[இரு இடங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்]



IBMS | IBMS | IBMS | IBMS | IBMS | IBMS | IBMS | IBMS | IBMS | IBMS | IBMS | IBMS | IBMS | IBMS | IBMS | IBMS | IBMS | IBMS

## புத்தாண்டில் புதிய வகுப்புகள்.....

### Certificate & Diploma Courses

Certificate
in
Ms Word
Ms Excel
Powerpoint
Internet & Email
O/L மாணவர்களுக்கென
பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட
பாடத்திட்டம்
3 Months

Diploma
in
Business Application
Information Technology
Advanced Programming Specialist
Java Programming
Desktop Publication
Web Designing
&
Higher Diploma
in
Software Engineering



IBMS
புலமைப்பரிசில் திட்டம் 2002 / 2003
May 2002
Aug 2002
Jan 2003
இல்
ஆரம்பமாகும் வகுப்புகளுக்கான போட்டிப் பரீட்சை கட்டணம் எதுவுமின்றி A/L April 2002 தேர்வு முடிவடைந்தவுடன் நடாத்தப்படும்.

Certificate Course மாணவர்கள் பாடத்திட்டத்தின் எஞ்சிய பாடங்களை சலுகை அடிப்படையில் கற்பதன் மூலம் Diploma சான்றிதழ் பெறக்கூடியவாறு பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.



IBMS புலமைப்பரிசில் திட்டம் 2001/2002 இன் கீழ் January 2002 இல் தொடங்கும் வகுப்புக்களில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் தமது பதிவினை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

பதிவுகள் 07-01-2002 அல்லது அதற்கு முன்பதாக

Week Day Classes
Monday, 07th January 2002
ஆரம்பம் 10:00 a.m
Week End Classes
Saturday, 05th January 2002
10:00 a.m

I B M S

Institute of Business Management Studies

701, K.K.S Road, Jaffna.
* N.M.M.V Road, Nelliyady.
* Main Road, Chankanai.

மேலதிக விபரங்கட்கும் சலுகைக் கட்டண விபரங்கட்கும்..... தலைமை அலுவலகத்துடன் அல்லது கிளை அலுவலகங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

T.P. : 021-3165 EMail : ibms@sltnet.lk

IBMS | IBMS | IBMS | IBMS | IBMS | IBMS | IBMS | IBMS | IBMS | IBMS | IBMS | IBMS | IBMS | IBMS | IBMS | IBMS | IBMS | IBMS


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.12.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.